அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 28 | செப்டெம்பர் 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2054

# தியாகத்தின் உருவம்!

## உணர்வுகளிற்கு அணை போட முடியாது

## முறுகலடையும் உறவு



# தியாகத்தின் உருவம்!



திலீபனே!
எங்கள்
தியாகத்தின்
பிறப்பிடமே!
உருகி உருகி நீ
அன்று பசித்தீயில்
குதித்து
பாரத அரசின்
முகமுடி கிழித்தாய்!

உன் வேள்வித் தீயை
அணைத்திட முடியாமல்
நல்லூரின் வீதியில்
ஆறாக ஓடிய
கண்ணீரில் கூட
கரையவில்லை
பாரத அகிம்சையரசு

கண்ணாடியணிந்து
கம்பீரநடையுடன்
புன்னகையோடு
மிடுக்கான தோற்றத்தில்
பார்த்த நம் பார்த்தீபன்

பொழிவிழந்து,
புன்னகை தொலைத்து,
சுருண்டு போன
உன் உருக்குலைந்த
தேகம் கண்டு
கண்ணீர் சிந்திய
போதும்
வைராக்கியத்துடன்
துளி நீருமருந்தாமல்
பாரத அரசின்
முகத்திரை கிழித்தாய்!!

பேரரசு அகிம்சையின்
மறு அரசாம்
சிங்கள இனவெறியரசுடன்
கைகோர்த்து
உன் தியாக வேள்வியை
ஆணவத்துடன்
எதிர்த்து உவகையுற்றது!

தாய்மை உணர்வுடன்
உனைத் தாலாட்டி
வளர்த்த தந்தையும்,
அன்பால் கட்டுண்ட
உன் மக்களும்,
உன் கையசைவில்
வளர்ந்த நண்பர்களும்
எம் தலைவரும்
நல்லமுடிவுக்காய்
காத்திருக்க

ஐந்து அம்ச
கோரிக்கையுடன்
தாயக கனவுகள்
சுமந்த பார்த்தீபன்
பாரத அரசின் முகமூடி
கிழித்து
உலக அரங்கமே
தலைகுனிய
வேள்வி தீயில்
ஆகுதியானான்!!

காலங்கள்
முப்பத்தாறு
கடுகியே பறந்தாலும்..
எம் மனங்களில் வாழும்
தியாகத்தின்
ஒளிப்பிழம்பே!!
உன் இலட்சிய வேள்வி
முடிவுறவில்லை!

பசியோடு போராடிய
பார்த்தீபன் இன்றும்
பசியுடன்
இருக்கின்றான்!
அவன் வளர்த்த
தியாகத்தீ
இன்னும் எரிந்து
கொண்டு
தான் இருக்கிறது!!

அம்முக்குட்டி

எழுநிலம்
EZHUNILAM
மாத இதழ் | மணம்: 28
செப்டெம்பர்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| முறுகலடையும்... | 06 |
| உயிர்த்த ஞாயிறை மீண்டும்... | 09 |
| உயிர்த்த ஞாயிறு தாக்குதல்... | 12 |
| உலகை அச்சுறுத்தும்.... | 15 |
| சமூக வலைத்தளங்களில்... | 17 |
| பூகோளமயமாதலின்.... | 20 |
| ஒரே ஒரு பாடும் (கவிதை)... | 24 |
| நல்லூர் கந்தசுவாமி... | 25 |
| அறிவியலும் நம்... | 27 |
| ஹாங்காங்கின்.... | 29 |
| குலதெய்வ வழிபாடு.... | 32 |
| நட்பு... | 35 |
| ஈழத்துக் கவிஞர்.... | 36 |
| யதார்த்தம்... | 37 |
| ஈகம் வழி (கவிதை)... | 40 |
| பின்னத்தில்.... | 42 |




## திருக்குறள்

**குறள் 762:**

"உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது"

**விளக்க உரை:**

தம் அரசுக்கு ஓர் அபாயம் வரும்போது, தாம் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், தமக்கு ஏற்படும் அழிவிற்கு அஞ்சாது நின்று போரிடும் வீரம், பரம்பரை பரம்பரையாக வாழும் சொந்த நாட்டு மக்களுக்கே அன்றி, மற்றவர்க்கு வருவது கடினம்.












கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக செஞ்சோலை சென்ற குழந்தைகளின் பிண அடுக்கை அட்டைப்படத்தில் பார்த்தவுடனேயே மனம் கலங்கிவிட்டது.

எவ்வளவு கனவுகள் சுமந்திருப்பார்கள் இந்தக் குழந்தைகள்? எத்தனை ஆசைகளுடன் இருந்திருப்பார்கள் இவர்களைப் பெற்றவர்கள்? அத்தனை குடும்பங்களின் துயரத்திலும் நாங்களும் பங்கெடுக்கிறோம்.

அருகில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஒரு உறவைத் தேடிக் கதறும் தாய். ஒரு தாயாக என்னால் இந்தத் தவிப்பைத் தாங்க முடியவில்லை.

கடவுள் இந்தக் கொடூரர்களுக்கு தண்டனை வழங்க மாட்டானா?

**-பிருந்தா செல்வச்சந்திரன்**
**பெல்ஜியம்.**

எப்படியிருந்த எங்கள் பெண்கள் இன்று இந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்? உண்மையைச் சொன்னால், போராளிப் பெண்களைப் பார்த்து, அவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட தன்னம்பிக்கையும், விவேகமும், துணிச்சலும்தான் இன்று உலகம் முழுவதும் எங்கள் பெண்களை துணிச்சலுடன் செயற்பட வைக்கிறது.

குறிப்பாக, பெண் தலைமைத்துவ குடும்பங்களில் எவ்வளவு திறமையாக நிர்வாகம் செய்கிறார்கள்? பெண்கள் படையணியின் முதலாவது பயிற்சிமுகாம் கவிதை அருமை.

**-மாதவன் மகாதேவன்**
**ரொறன்ரோ.**

மிக முக்கியமான பிரச்சனையை ஆசிரியர் தலையங்கமாக எடுத்திருக்கிறீர்கள். இப்போதும் கவனிக்காமல் காலம் தாழ்த்தினால் எங்கள் மண் வாழத் தகுதியற்றதாக ஆகிவிடும்.

தண்ணீர் இல்லாமல் வாழ முடியுமா? எனக்கென்ன என்று இருக்காமல் எல்லோரும் ஒன்றாக இறங்கி தீர்வு காண வேண்டும். தப்பு செய்பவர்களுக்கு அந்த இடத்திலேயே தண்டனை கொடுக்கப்பட வேண்டும்.

**-சூர்யதேவ் சுதாகரன்**
**பிரான்ஸ்.**




தற்கொலை தவறு என்பது பற்றிய கட்டுரை காலத்தின் கட்டாய தேவை. பத்திரிகைகள், முகநூல்கள், இணையதளங்கள் என்று எங்கு பார்த்தாலும் யாராவது ஒருவராவது தற்கொலை செய்துகொண்ட தகவல் நிச்சயம் இருக்கும். இளைய சமுதாயத்தினரின் மனச்சிதைவுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டியது இப்போதைய தலையாய பணியாகவுள்ளது. இல்லையெனில் அவர்களை நாம் தொலைத்து விடுவோம்.

**-திலகவதி செல்லத்துரை**
**லண்டன்.**

சிங்கள இனவாதம் பற்றி தொடர்ந்து பேசுகிறோம். எழுதுகிறோம். இளைய தலைமுறையினரின் கவனம் நாடு சார்ந்ததாகவோ, மக்கள் நலன் சார்ந்ததாகவோ இருப்பதாகத் தெரியவில்லை.

தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் ஒன்றுக்கொன்று தொடர்புபடாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.முன்பு மக்களும் இளைய தலைமுறையினரும் எவ்வளவு எழுச்சியுடன் இருந்தார்கள்? இளையவர்களை எழுச்சி பெற வைக்க உங்கள் பத்திரிகையும் உதவி புரியட்டும்.

**-வேலருள் வைரவநாதன்**
**சிக்காகோ, அமெரிக்கா.**

எழுநிலம்
அரசியல். சமூக. பொருளாதார இதழ்

மணம் 27 இன் அட்டைப்படம் மனதைத் தொடுவதாக அமைந்துள்ளது. கவிதைகள் அருமை. வலை நெடுந்தொடர் சூப்பர். கட்டுரைகள் நன்று. என்றாலும் சில கட்டுரைகளை விளங்கிக் கொள்வது கடினமாக உள்ளது. இப்படியான கட்டுரைகள் தேவைதானா? இலகு நடையில் எழுதலாமே. விளங்குவதற்கு கடினமான கட்டுரைகளை மக்கள் வாசிக்காமலே விட்டுவிடுவார்கள். மக்களைச் சென்றடையாமற் போய்விடும். தயவு செய்து கருத்தில் எடுப்பீர்களா?

**-ஞானசேகரன் சுந்தரமூர்த்தி**
**ஜேர்மனி.**

13 ஐ வைத்து விளையாட்டு பார்த்துப் பார்த்து சலித்து விட்டது. இனி புது விளையாட்டு ஒன்றைப்பற்றி எழுதுங்களேன். தேர்தல் கட்சிகளின் சரிவை கட்டுரையில் தான் பார்த்தோம். இங்கு நடப்பில் நாங்கள் எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை.

வாழ்க்கையை கொண்டு நடத்த படும் பாட்டில் யார் ஆண்டால் என்ன, யார் வீழ்ந்தால் என்ன? தமிழனை அவர்கள் வாழ விடப்போவதில்லை. எங்கள் MPமார் அவர்களுக்கு குடை பிடிப்பதை நிறுத்தப் போவதில்லை. மனிதப் புதைகுழிகள் பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் மக்களுக்கு பரப்ப முடியுமா?

**-பாவப்பட்ட ஊரவன்.**
**தாயகம்.**

வலை கதையை கொஞ்சம் கூடுதலான பக்கங்கள் போடுங்களேன். சீக்கிரத்தில் வாசித்து முடிந்து விடுகிறது. முல்லையின் கவிதைகள் இயற்கை சார்ந்து மிக அழகாக விழுகின்றன. கவிதை தவிர வேறு ஆக்கங்கள் முல்லை எழுதுவதுண்டா? அம்முக்குட்டியின் கவிதை சிறப்பு. நல்ல உபதேசங்களைச் சொல்லும் குட்டிக் கதைகள் போடுகிறீர்கள். நன்றி. கட்டுரைகளில் சிலதுபுரியாத மொழியில் வருவதுபோல விளங்குவதே இல்லை. மண்டை சூடாகிவிடும் போல இருக்கிறது.

**-மாலதி திவாகர் சிட்னி, அவுஸ்திரேலியா.**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...
Ezhunilam.com

# உணர்வுகளிந்கு அணை போட முடியாது

## ஆசிரியர் பக்கம்

எமக்காக ஒருதுளி நீரும் அருந்தாது உண்ணாநோன்பிருந்து தன்னைத் தற்கொடையாக்கிய தியாகி திலீபனின் 36வது நினைவேந்தல் நிகழ்வானது உலகெங்கும் பேரெழுச்சியுடனும், கண்ணீருடனும் நடந்து முடிந்திருக்கிறது. தாயகத்தில், சிங்கள காடையர்களினதும், அரச புலனாய்வாளர்களினதும், இனவாத பிக்குகளினதும் நெருக்கடிகளுக்கும் தாக்குதல்களுக்கும் மத்தியிலும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது திரண்ட மக்கள் வெள்ளத்துடன் நிகழ்வுகள் அரங்கேறியிருக்கின்றன.

இந்தத் தாக்குதல்கள், நெருக்கடிகள், கைதுகள் என்பன எமக்குப் புதியவை அல்ல. 2009இல் ஒரு பாரிய இனப் படுகொலையை நிகழ்த்தி போரை மௌனிக்கச் செய்த பின்னர், இலங்கை சுமுக நிலைக்குத் திரும்பி விட்டதாகவும், தமிழ் மக்கள் பிரச்சனைகளின்றி வாழ்வதாகவும் வெளியுலகத்திற்குக் காட்ட சிங்கள அரசு பகிரதப் பிரயத்தனம் செய்கிறது.

தமது குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், தமக்காக உயிரைத் துறந்தவர்களுக்கு அஞ்சலி செய்வது என்பது ஒரு மனிதனுக்கான தார்மீக உரிமை. இலங்கையில் இந்த உரிமையைக் கொடுக்கக்கூட பயப்பட்டு, உருவப்படங்களையும் நினைவிடங்களையும் சிதைத்து தனது இனவெறியை திருப்திப்படுத்திக் கொள்கிறது சிங்கள அரசு.

இவ்வாறுதான் இவ் வருடமும், திருமலையில் வைத்து திலீபனின் திருவுருவம் தாங்கிய ஊர்தியைத் தாக்குதலுக்கு உள்ளாக்கி மீண்டும் தனது கோர முகத்தைக் காட்டியிருக்கிறது இனவாத சிங்கள அரசு. தியாகி திலீபனின் 36வது நினைவுநாளை முன்னிட்டு பொத்துவில் தொடக்கம் நல்லூர் வரை ஊர்திப் பவனி ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. இந்த ஊர்தி திருகோணமலையில் கப்பல் துறைமுக சந்தியை அண்மித்தபோது சிங்களக் காடையர்களால் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. வாகனத்தில் இருந்தவர்கள் வெளியே இழுத்து தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். இவை அனைத்தையும் கை கட்டி வேடிக்கை பார்த்திருக்கிறார்கள் சிங்கள அரச புலனாய்வாளர்கள்.

ஐநா பொதுச்சபையின் தீர்மானம்பாதிக்கப்பட்ட மக்கள் தாம் நேசித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்குஉரிமை உண்டு என்று அங்கீகாரம் அளித்துள்ளது. ஆனால்,எங்கள் தேசத்தில் 36 வருடங்களுக்குமுன்னர்,தான்நேசித்தமக்களுக்கானநீதிவேண்டி, அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்த ஒரு உன்னத மனிதனை நினைவு கூரும் உரிமைகூட மறுக்கப்படுகிறது, நினைவு கூருபவர்கள் குறி வைக்கப்படுகிறார்கள் என்றால் இதை விடவும் காட்டுமிராண்டித்தனம் எதுவும் இருக்க முடியாது. நினைவுகூர அனுமதி மறுக்கும் ஒரு நாட்டில் இன, மத நல்லிணக்கம் எவ்வாறு சாத்தியமாகும்? தமிழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகளையும் தர மறுக்கும் சிங்கள அரசு உலக அரங்கில் கண்டிக்கப்பட வேண்டும், தண்டிக்கப்பட வேண்டும்.

ஒருபுறம் பேரினவாதம் கக்கும் சிங்களக் காடையர்கள், அவர்களை உசுப்பேற்றி விடும் பிக்குகள், இவர்களுக்கு காவலாயிருக்கும் இராணுவ, காவற்துறை,இனக் களையெடுப்பு செய்யும் அரச புலனாய்வாளர்கள் என்று அனைவருக்கும் தமிழர்களை அழிக்கும் அளவில்லாஅதிகாரங்களை கொடுத்துவிட்டு பொருளாதாரப் பிச்சை எடுப்பதற்காக பறந்து திரிகிறார் ரணில்.

போகின்ற இடங்களில் எல்லாம் தமிழர் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும், புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் எமக்கு உதவ வேண்டும், நாட்டின் பொருளாதார நிலை சீரானால், விசாரணைக் குழு ஒன்றை அமைத்து தமிழ் மக்களின் பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவரலாம் என்று தமிழர்களையும் ஒரு காரணியாகக் காட்டி நாடு நாடாக இரக்கும் ரணிலுக்குஜெனிவா அமர்விற்கும் பதில் சொல்லியாக வேண்டும் என்பதும் தெரியும். இவ்வளவு பிரச்சனைகளுக்கு மத்தியிலும் தாயகத்தில் தமிழ் மக்கள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்றால்சிங்கள அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கு எந்தநியாயமான தீர்வும் கிடைக்கப் போவதில்லை என்பது வெளிப்படை.

உயிர்நீத்த மறவர்களின் நினைவை மக்கள் மனங்களில் இருந்து அகற்றிவிடமுடியும், அவர்கள் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்த முடியும் என்று இன்னமும் பகற்கனவு காண்கிறது சிங்களம். இதற்காக பேர்பெற்ற கஞ்சா வியாபாரி சித்தார்த் இப்போது புலிகளால் கொல்லப் பட்டவர்கள் என்ற ஒரு பட்டியலுடன் அரச புலனாய்வாளர்களால் களமிறக்கப் பட்டுள்ளான். இராணுவத்தினராலும் அவர்களின் அடிவருடி ஒட்டுக் குழுக்களாலும் கொல்லப்பட்டவர்களும், நோயினால் இறந்தவர்களும் அப்பட்டியலில் இருப்பதையும், சித்தார்த் யார் என்பதையும் மக்கள் ஏற்கனவே அடையாளம் கண்டுவிட்டனர்.

இவை தவிர, திலீபனிற்கான அஞ்சலி நிகழ்வுகளில் மாணவர்கள் கலந்து கொள்வதும், வருடா வருடம் மாவீரர் நினைவாக விளையாட்டுப் போட்டிகள், இரத்ததான முகாம்கள் என்பன நடைபெறுவதும் இந்தியத் தூதருக்கு பிடிக்கவில்லையாம். குறிப்பாக வன்னியில் மாணவர்கள் பேரெழுச்சியுடன் கலந்து கொண்டதானது அவரை அதிருப்திக்கு உள்ளாக்கி விட்டதாம். இதனால், கடந்த திலீபன் வாரத்தில் எந்த நிகழ்வுகளுக்கும் அனுமதி மறுத்து இந்தியத் தூதுவரின் கவலையையும் விசனத்தையும் போக்கியிருக்கிறது தேசியக் கல்வி அமைச்சு. மாணவர்களும் எதிலும் கலந்து கொள்ளக் கூடாது என்று தடையுத்தரவும் போட்டுவிட்டது.

இதே கல்வியமைச்சு, இந்தியத் தூதுவர் கலந்துகொள்ளும் கலாசார விழாக்களில் மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று சுற்று நிருபம் அனுப்புகிறது, எமது பிள்ளைகள் யோகா, ஹிந்தி கற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கிறது. காந்தி ஜெயந்தி, இந்திய சுதந்திர தினம், வல்லபாய் பட்டேல் பிறந்த தினம் கொண்டாட வேண்டும்நிர்ப்பந்திக்கிறது. இதற்கு ஆதரவாக அரச புலனாய்வாளர்கள் பின்னணியில் நின்று எமது பிள்ளைகளை அச்சுறுத்துகின்றனர்.

இத்தனை தடைகளுக்கு மத்தியிலும் மக்கள் மத்தியில் எழுச்சி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுகின்றன என்றால் எமது பிள்ளைகள் செய்த ஈகையும் அவர்களை வழிநடத்திய ஒரு உன்னத தலைவனும்தான் காரணம். எத்தனை தடைகள் வந்தாலும் எமது உணர்வுகளுக்கு அணை போட முடியாது. தடைகளைத் தகர்த்து எமது அன்புக்குரியவர்களின் பாதையில் பயணிப்போம்.



பாரி

# முறுகலடையும் உறவு

இந்தியா – கனடா இடையே எழுந்துள்ள முறுகல் நிலை இப்போது உலகின் பேசு பொருளாக மாறியுள்ளது.கடந்த ஜூன் 18 அன்று கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் சீக்கிய கோவில் ஒன்றின் முன்னால் வைத்து ஹர்தீர் சிங் நிஜ்ஜார் என்ற 45 வயதுடைய நபர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

அண்மையில் இந்தக் கொலையில் வெளிநாட்டு ஏஜென்டுகள் சம்பந்தப் பட்டிருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இந்தியா இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம். எமது நாட்டினுள் நுழைந்து, எமது இறையாண்மைக்கு தீங்கு விளைவிக்கும் யாராக இருந்தாலும் அதை நாங்கள் மன்னிக்க முடியாது என்று கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கனடிய பாராளுமன்றில் வைத்து வெளிப்படையாகக் குற்றம் சாட்டியதானது உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



ட்ரூடோ 'இதன் பின்விளைவுகள் மிகக் கடினமானதாக இருக்கும்' என்ற தொனியில் கடுமையாகப் பேசியதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர். இந்தியா இந்தக் குற்றச்சாட்டிற்கு உடனடியாக மறுப்புத் தெரிவித்து விட்டது. இந்தியாவுக்கு எதிராக இவ்வளவு பெரிய குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு கனடாவிடம் என்ன ஆதாரங்கள் இருக்கின்றன என்றுவினவுபவர் யாருக்கும் எந்த அடிப்படையில் கனடா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தது என்ற விபரத்தை இதுவரை கனடிய அரசு வெளியிடவில்லை.

சரி! யார் இந்த ஹர்தீர் சிங் நிஜ்ஜார்? இரண்டு பெரிய நாடுகள் தமக்குள் முறுகிக் கொள்ளும் அளவுக்கு அவருக்கு என்ன முக்கியத்துவம்? இந்தியாவில் தேடப்படும் தீவிரவாதிகளில் இவரும் ஒருவர் என்கிறது இந்தியா. பஞ்சாப் பிரிவினைவாத இயக்கமான 'காலிஸ்தான்' அமைப்பின் தலைவர்களில் இவரும் ஒருவர் என்கிறது அது. இவரின் மேல் இந்தியாவில் 10 தீவிரவாத குற்றச்சாட்டுகள் பதியப் பட்டிருப்பதாகவும் (FIR), அந்த விடயம் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் தெரியும் என்றும் சொல்கிறது இந்தியா. காலிஸ்தான் அமைப்பிற்கு பயிற்சி வழங்குவது, அவர்களை ஒருங்கிணைத்து திட்டம் தீட்டி செயற்படுவது (networking), நிதி வழங்கல் போன்றவற்றை செய்துவந்தவர் இவர் என்பது இந்




தியாவின் குற்றச்சாட்டு.

நிஜ்ஜார்,கனடா சறேயில் சீக்கிய குருத்வாரா சாகிப்பின் தலைவராக இருந்தவர் என்கிறது கனடா. இந்தியா 'பயங்கரவாதம்' என்று சொல்வது அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில்'கருத்து சுதந்திரம்' ஆக சித்தரிக்கப்படுகிறது.மேற்குலகம் இப்படியானவர்களுக்கு ஆதரவு தருவதான கருத்துள்ளது. இந்த நிலையில் நிஜ்ஜார் காலிஸ்தானின் செய்தித் தொடர்பாளராகவே கனடாவில் பார்க்கப் படுகிறார்.

கொலை தொடர்பாக Five Eyes Intelligence Alliance என்ற உளவு அமைப்பு கொடுத்த தகவல்களையே ட்ரூடோ பாராளுமன்றில் பகிர்ந்ததாக கனடாவுக்கான அமெரிக்க தூதர் பேட்டியொன்றில் கூறியுள்ளார். இந்த உளவு அமைப்பானது அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற 5 நாடுகளுக்கான உளவு அமைப்பாகும்.

இந்த நாடுகள் அனைத்தும் தனக்காக குரலை உயர்த்தும் என்று ட்ரூடோ எதிர்பார்த்திருந்த நிலையில் அவை கமுக்கமாக இருப்பதானது அவரை பெரிதும் ஏமாற்றமடையச் செய்துள்ளது. கனடாவை விடவும் 35 மடங்கு பெரிய, பொருளாதாரத்தில் வளர்ந்துவரும் ஒரு நாட்டுக்கு எதிராக பகிரங்க குற்றச் சாட்டை முன்வைத்த பின்னர் உலக அரங்கில் ட்ரூடோ தனித்து விடப்பட்டுள்ளார் போலத் தெரிகிறது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

**“எல்லாவற்றிலும் முக்கியமானதாக, கனடாவில்தான் புலம்பெயர் ஈழத் தமிழர்கள் பல்லாயிரம் பேர் வாழ்கின்றனர். இவர்களுக்கு ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமா? என்பன போன்ற ஆயிரமாயிரம் கேள்விகள் எல்லோர் மனதிலும் எழும். என்ன நடக்கவிருக்கிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.”**



'ஈரானில் பேரழிவு ஆயுதம் இருப்பதான' இந்த Five Eyes உளவுத்துறை தகவல்தான் ஈரானில் நிகழ்ந்த பெரும் போருக்கும், அழிவுகளுக்கும் காரணமாக அமைந்தது. இதனால் இந்த உளவுத் துறையின் நம்பகத் தன்மை பற்றியும் இந்தியா கேள்வி எழுப்பியுள்ளது. 'ஈராக் தகவல் பொய் யாகிப் போனதால் எல்லாத் தரவுகளும் பொய் என்று அர்த்தமல்ல, தவறான கருத்தால் விளையும் தீங்கு எவ்வளவு பாரதூரமானது என்பது பற்றியது தான் இது' என்கிறார் 'தி எகனாமிக்ஸ்' பிரிட்டிஷ் பத்திரிகையின் பாதுகாப்பு செய்திப் பிரிவு ஆசிரியர் ஷஷாங்க் ஜோஷி.

கனடாவில் பிரதமர் ட்ரூடோவின் செல்வாக்கு அருகி வருகிறது, அவர் அடுத்தமுறை பதவிக்கு வருவதும் நிச்சயமில்லை. இந்த நிலையில் கணிசமானளவு தொகையில் கனடாவில் வாழும் சீக்கிய சமூகத்தவரின் வாக்குகளை மனதில் வைத்தும் அவர் பேசியிருக்கலாம், அல்லது மேற்குலகிற்கு மட்டும்தெரிந்த வேறு ஏதாவது காரணமாகவும் இருக்கலாம், எதுவாயிருந்தாலும் இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் மறைமுக ஆதரவு கனடாவிற்கு உண்டு என்கின்றனர் வல்லுனர்கள்.

இதை இந்தியாவும் உணர்ந்து கொண்டுள்ளது. நிஜ்ஜானி விவகாரத்தில் அமெரிக்கா கனடாவுக் குக் கொடுக்கும் மறைமுக ஆதரவு இந்திய – அமெரிக்க உறவையும் பாதிக்கலாம் என்கிறார்



இந்தியாவின் புகழ்பெற்ற மூலோபாய நிபுணர் பிரம்மா செல்லானி.

இடையே, 'தி ஹிந்துஸ்தான்' பத்திரிகையின் பகுப்பாய்வுக் கட்டுரை ஒன்று 'ஆதாரங்கள் எதையும் முன் வைக்காமல் கனடா இந்தியா மீது குற்றம் சுமத்துகிறது. அதனை அமெரிக்காவும் ஆதரிக்கிறது. எந்த அடிப்படையில் தலிபான் தலைவர் முல்லா அக்தர் மன்சூரையும், இரானின் ஜெனரல் காசிம் சுலேமானியையும் அமெரிக்கா வெளிநாட்டு மண்ணில் கொன்றது? இது தொடர்பாக ஐ நா ஏன் கேள்வி எழுப்பவில்லை?' என்று காரசாரமாகக் கடிந்து எழுதியுள்ளது.

ஆனாலும்,வெளிப்படையான முறுகல் நிலைக்கு அமெரிக்கா தயாராக இல்லை என்று தெரிகிறது. ஐ நா சபையில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், கிழக்கு ஐரோப்பாவிற்கான பொருளாதார வழித்தடத்தில் இந்தியா ஒரு புதிய பொருளாதார வழித்தடத்தைக் காட்டுவதாக இந்தியாவைப் புகழ்ந்து தள்ளியிருக்கிறார். இந்த விடயம் தொடர்பில் கனடா – அமெரிக்கா இடையே நல்லதொரு புரிந்துணர்வு இருப்பதாக



அமெரிக்கத் தரப்பு தெரிவிக்கிறது. இந்தியாவுடனான கனடிய பிரச்சனை தொடர்பாககருத்துத் தெரிவித்தபோது ''தீவிர கவலையளிக்கிறது' என்பது மட்டுமே அமெரிக்காவின் கருத்தாக இருக்கிறது.

தற்போது இந்தியாவின் வளர்ச்சி உத்திகளும், அதன் பெறுபேறுகளும் இந்தியாவை ஒரு முக்கிய இடத்திற்கு கொண்டு வந்திருப்பதானது கனடாவின் நலன்களை பலவீனமாக்கியுள்ளதாக ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். கிழக்கே படுவேகமாக வளர்ந்துவரும் சீன ஆதிக்கத்திற்கு கடிவாளமிடும் ஒரே துருப்புச் சீட்டாக மேற்குலகிடம் இருப்பது இந்தியா மட்டுமே. இந்த நிலையில் வெளிப்படையாக இந்தியாவைப் பகைத்துக்கொள்ள அவை முன்வருமா என்பதும் கேள்விக்குறியே. தன் நாட்டில் நடந்த கொலையை பகிரங்கமாக கண்டிக்குமாறு Five Eyes கூட்டணியினரை கனடா கேட்டும் அவை மௌனம் சாதிப்பதும் இதனை உறுதிப் படுத்துவதாகவே உள்ளது.

பிரித்தானியாவும் 'இதுபற்றி தீவிரமாக விசாரிக்க வேண்டும்' என்பதைத் தாண்டி வேறெதுவும் கூறவில்லை என்ற ஏமாற்றம் ட்ரூடோவுக்கு உண்டு என்கிறார்கள் அவதானிகள். G20இலும், காமன்வெல்த் இலும் இந்தியாவும் கனடாவும் அங்கத்துவ நாடுகள். கனடாவின் வர்த்தக கூட்டாளிகளில் இந்தியா பத்தாவது இடத்தில் இருந்தது. இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சி 56% ஆக இருந்தது.

இதுவரை காலமும் இரு நாடுகளுக்கும் இடையில் இருந்த நல்லுறவினால் இரு நாடுகளுக்கிடையில் விசா எடுப்பது இலகுவாக்கப் பட்டிருந்தது. தவிர இந்திய மாணவர்களில் ஏராளமானோர் கனடாவில் உயர் கல்வியைத் தொடர விருப்பப்படுவதும், படித்து முடிந்தபின் கனடிய வதிவுரிமை பெற்று அங்கேயே தங்கி விடுவதும் வழமையாக இருந்தது. தவிரவும் இந்தியக் கம்பனிகள் பல கனடிய மண்ணில் இருந்தன.


இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது. விசாக்கள் பெறுவதில் கடுமையான நடைமுறை வந்துவிட்டது. இந்தியக் கம்பனிகள் கடுமையான நெருக்கடியைச் சந்திக்கின்றன. நட்புறவில் ஏற்பட்ட மோசமான பாதிப்பின் விளைவாக இந்திய IT சேவை, அதிலும் குறிப்பாக 'நாஸ்காம்', கடுமையாக பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் பட்டது. இப்போது அதற்கு உடனடிப் பாதிப்பு இல்லையென்றாலும் வேறொரு பிரச்சனை கிளம்பி விட்டது. கனடிய IT நிறுவனமான "Resson Resosace'இந்தியாவுடனான ஒப்பந்தத்தை தானாகவே முறித்துக் கொண்டு விட்டது. இதனால் இந்தியக் கம்பனியான 'மகிந்திரா அன்ட் மகிந்திரா' பெரு நஷ்டத்தை சந்திக்க வேண்டி வந்து விட்டது.

தவிர, கனடிய வாழ் இந்தியர்களுக்காக இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் 'மைசூர் பருப்பு' இறக்குமதி பெரு வீழ்ச்சி கண்டுள்ளது. கனடா இந்தியா இடையில் இருந்த 60 மில்லியன் டாலர் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையான அடியை சந்தித்துள்ளது. பதிலுக்கு பதில் நடவடிக்கையாக இந்தியாவிலிருந்த கனடிய தூதுவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்தியா பணித்துள்ளது. கனடாவின் இந்தியா எனப்படும் இந்தியர்கள் வாழும் பகுதிகளில் மக்கள் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இராஜதந்திர பின்னடைவானது பொருளாதார பின்னடைவாகவும் மாற ஆரம்பித்திருப்பதானது சிக்கலானது என்கின்றனர் வல்லுனர்கள். இடையில் மக்கள்தான் நெருக்கடிகளைச் சந்திக்கப் போகிறார்கள் என்கிறார்கள் அவர்கள்.

இடையே, 'நம்பகமான குற்றச்சாட்டு' என்று கூறும் ட்ரூடோ இந்தியாவிற்கு எதிரான ஆதாரங்களை வெளிக்கொணரப் போகிறாரா? மற்றைய மேற்கத்தைய நாடுகள் எந்தப்பக்கம் நிற்கப் போகின்றன? சீனாவின் எதிர்வினை என்னவாக இருக்கும்? என்பனவற்றோடு கனடாவிற்கு கல்வி பயிலச் செல்லும் மாணவர்களின் நிலை என்ன? அங்குள்ள இந்தியக் கம்பனிகளின் நிலை என்ன? அங்கிருக்கும் இந்தியர்களின் நிலை என்ன?

எல்லாவற்றிலும் முக்கியமானதாக, கனடாவில் தான் புலம்பெயர் ஈழத் தமிழர்கள் பல்லாயிரம் பேர் வாழ்கின்றனர். இவர்களுக்கு ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமா? என்பன போன்ற ஆயிரமாயிரம் கேள்விகள் எல்லோர் மனதிலும் எழும். என்ன நடக்கவிருக்கிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.






திசராணி

# உயிர்த்த ஞாயிறை மீண்டும் உயிர்ப்பித்தது சனல் 4



சனல் 4 உயிர்த்த ஞாயிறை உயிர்ப்பித்து, அரசியல் முகாமை பிரித்து வைத்துள்ளது. மோசஸ் இஸ்ரேலியர்களை பிளவுபட்ட செங்கடல் வழியாக வழிநடத்தியது போல, கர்தினால் மல்கம் ரஞ்சித் நாட்டின் பிளவுபட்ட அரசியல் நீரோட்டம் வழியாக தனது விசுவாசிகளை வழிநடத்துகிறார்.

சனல் 4 ஆவணப்படத்தில் ஒரு நிலைப்பாட்டை எடுக்காமல், ‘சுதந்திரமான சர்வதேச விசாரணைக் குழுவின்’ மூலம் சனல் 4 இன் அம்பலப்படுத்தல்கள் குறித்து ‘சுதந்திரமான, பாரபட்சமற்ற, நியாயமான, வெளிப்படையான மற்றும் பரந்த அடிப்படையிலான விசாரணைக்கு’ அழைப்பு விடுத்ததன் மூலமும் கர்தினால் தலையில் ஆணி அடித்துள்ளார்.

அதே சமயம், தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க அனுபவத்தைப் பின்பற்றி, ‘உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் காரணமானவர்கள் பொறுப்பை ஏற்று மனந்திருந்தினால் அவர்களை மன்னிக்கும்’ தனது விருப்பத்தையும் கர்தினால் மல்கம் ரஞ்சித் உறுதிப்படுத்தியுள்ளார்.

அநீதியால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர்வது இன்றியமையாத பகுதியாக இருப்பதைப் போலவே மன்னிப்பதும் நிலை மாறுகால நீதியின் முக்கிய அம்சமாகும். குற்றங்களை மறைப்பது மறுபுறம், அநீதியை நிலைநிறுத்துவது மற்றும் அநீதி இழைக்கப்பட்டவர்களின் இழப்பில் தவறு செய்பவர்களுக்கு வெகுமதி அளிப்பதாகும்.

அரசியல் குற்றங்களின் நிகழ்வுகளில், கடுமையாக அநீதி இழைக்கப்படுகிறது. சனல் 4 வெளியிட்டவைகளின் உண்மைத்தன்மை பற்றி போதுமான அளவுக்கு கூறப்பட்டாலும், சனல் 4 இன் உண்மையான விளைவு 2019 உயிர்த்த ஞாயிறு வரையிலான புள்ளிகளை இணைப்பதைத் தாண்டியது.

லசந்த விக்ரமதுங்கவின் கொலையில் இருந்து உயிர்த்த ஞாயிறு படுகொலைகள் வரையிலான குற்றங்களின் முழு வலையுமே திடீர் ஆறுதலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. நீங்கள் வலையை முன்னும் பின்னும் நீட்டலாம் – குமார் பொன்னம்பலத்தின் கொலை, மில்லினியத்தின் தொடக்கத்தில், ஒரு வருடத்திற்கு முன்னர் தினேஷ் ஷாப்டரின் கொலை வரை.

முதலில், ஒரு அரசு வழக்கறிஞர் உண்மையில் வழக்கு கோப்பு காணாமல் போய்விட்டதாக நீதிமன்றத்தில் கூறினார். பிந்தைய நிலையில், ஷாஃப்டர் எப்படி இறந்தார் என்பது வழக்கைப்



பற்றி அறிந்த அனைவருக்கும் தெரியும் என்றாலும், அவர் எப்படி இறந்தார் என்பதை அதிகாரப்பூர்வமாக கண்டுபிடிக்க பொலிஸ் துறை இன்னும் முயன்று வருகிறது.

இடையில், தீர்க்கப்படாத குற்றங்கள், சுதந்திரமாக திரியும் குற்றவாளிகள் மற்றும் நன்கு பாதுகாக்கப்பட்ட சூத்திரதாரிகளின் முழு வலையும் உள்ளது. சனல் 4 புழுக்கள் நிறைந்த முழு டப்பாவையும் கிழித்துவிட்டது. டப்பாவை மூடுவது கடைசியில் முடியாத காரியமாகத் தெரிகிறது. வேறு விதமாகச் சொன்னால், சனல் 4, இந்த நூற்றாண்டின் அனைத்து அரசியல் குற்றங்களையும், அதைச் செய்த குற்றவாளிகளையும், அவற்றில் எதனையும் தீர்ப்பதற்கு அரசின் விருப்ப



மின்மையையும் உள்ளடக்கிய ஒரு பரந்த வளைவை வழங்கியுள்ளது.

குற்றவாளிகள் யாரையும் அரசு அதிகாரப்பூர்வமாக அடையாளம் காணவோ, குற்றஞ்சாட்டவோ அல்லது குற்றவாளியாக்கவோ முடியாது, ஆனால் குற்றவாளிகளின் பொது அடையாளத்தை தணிக்கை செய்யவோ அல்லது பொது சந்தேகத்தில் இருந்து அவர்களை அகற்றவோ முடியாது. இதுவரை நடத்தப்பட்ட 'விசாரணைகள்' எதுவும் உறுதியானதாக இல்லை. அவற்றில் ஒன்று அல்லது பலவற்றின் தேவையை சனல் 4 வலுப்படுத்துகிறது.

## மூடிமறைக்கும் அரசியல்

கோத்தாபய ராஜபக்ச, ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ஒரு முட்டாள்

**"ராஜபக்ச குடும்பம் மற்றும் புலிகளிடமிருந்து விலகியவர்களின் குறிப்பிட்ட சந்திப்பு 2019 உயிர்த்த ஞாயிற்றுக்கிழமைக்கு நீண்ட காலத்திற்கு முன்பே தொடங்கியது மற்றும் அது தொடர்கிறது. இப்போது சனல் 4 ஆல் குற்றம் சாட்டப்படும் அவர்களுக்கிடையிலான தொடர்பை சர்வதேச மன்னிப்புச் சபை 'ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கின் சரிவு' என்று அழைத்ததன் மூலம் மிகவும் திட்டவட்டமாக அம்பலப்படுத்தியது."**

தனமான அறிக்கையின் கீழ் ஒரு முட்டாள்தனமான கையொப்பத்துடன் தனது சொந்த பாதுகாப்பிற்காக விரைந்து சென்றிருந்தார். [பூமியில் ஆர்கானிக் மனிதனைத் தவிர யார் இப்படி கையெழுத்திடுவார்கள்]. அலை மாறத் தொடங்கியிருப்பதாக நினைத்துக் கொண்டு அவருடன் சேர இன்னும் விசுவாசமான விசுவாசிகள் வெளியே வந்தனர். ஆனால் வேறு வழி. சனல் 4 ஐயுறவுள்ளவர்கள் மற்றும் ஸ்தாபன மைனாக்கள் ஏதோ ஒரு வகையில் சர்வதேச விசாரணைக்கான அழைப்புகளால் மூழ்கடிக்கப் படுகிறார்கள். மைத்திரிபால சிறிசேனவும் நாமல் ராஜபக்சவும் கூட அதற்குத்தான். முற்கால [மகிந்த] ராஜபக்ச விசுவாசிகள் தம்மைத் தாங்களே விட்டுக்கொடுத்து கோத்தாவுக்காக கண்ணீர் விடப் போகிறார்கள். குண்டுவெடிப்புக்கு ஒரு புதிய அரசியல் விளக்கம் கூட உள்ளது. ஜனாதிபதி வேட்பாளராக குடும்பத்தின் வேட்புமனுவை உறுதிப்படுத்துவது போல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது அவ்வளவு முக்கியமல்ல. இது கோத்தாவுக்கு எதிராக மற்றவர்களுக்கு எதிராக மாறி வருகிறது, அதாவது நாடு அவசியம் இல்லை.

ஜெனீவாவில், தூதுவர் ஹிமாலி அருணதிலக [தொழில்ரீதியான இராஜதந்திரி], அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிஸ் ,அமெரிக்காவின் எவ்.பி.ஐ மற்றும் இன்டர்போல் உதவியுடன் அரசாங்கத்தால் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் நன்றியற்ற வேலையைச் செய்கிறார்.

ஆனால், அனைத்து இலங்கையர்களுக்கும் ஜெனிவாவில் அவர் சொல்வதைக் கேட்பவர்களுக்கும் என்ன தெரியும் என்பது அவருக்கும் தெரியும். யார் யார் என்ன செய்தார்கள், எப்போது செய்தார்கள் என்பதை உறுதியாகக் குறிப்பிடுவதற்கு இந்த விசாரணைகளில் முழு உண்மையும் வெளிவரவில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பு கோத்தாவுக்கு வாதிடுவோருக்கு உண்மையை திரித்துக்கூறுவோருக்கு சவுகரியமானதாகி விட்டது. அதிகாரத்தில் இருப்பவர்கள் கடமை தவறியமைக்கு எதிரான அடிப்படை உரிமைகள் மனுவின் மீது நீதிமன்றத் தீர்ப்பு இருந்தது. உயிர்த்த ஞாயிறு அன்று என்ன நடந்தது என்பதும் யார் யாருடன் சதி செய்தார்கள் என்பதும் கடைசி வார்த்தை அல்ல.

இதுவரை 79 குற்றப்பத்திரிகைகளாகப் பதிவாகியிருப்பது, குண்டு வெடிப்புகளுக்குப் பின்னால் மூளையாகச் செயற்பட்டதா என்ற கேள்விக்கு விடையளிக்கவில்லை. சனல் 4 ஆவணப்படம் அரசாங்கத்தைப் பற்றியது அல்ல என்றும், பதிலளிப்பதா இல்லையா என்பதை சம்பந்தப்பட்ட நபர்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி விக்கிரமசிங்க தனது அமைச்சரவைக்கு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

அந்த நிலை நீண்ட காலம் நீடிக்கவில்லை, எனவே, அவர் மற்றொரு பாராளுமன்றக் குழு விசாரணையை அறிவித்தார், மேலும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் வேறு ஒரு குழுவைக் கொண்டு வருவார்.





கத்தோலிக்க திருச்சபை அதை நிராகரித்துள்ளது. உரத்தும் தெளிவாகவும் வெளிவருவது என்னவென்றால், சனல் 4 வெளிப்படுத்திய தகவல்கள் நம்பகமான சர்வதேச இருப்பு அல்லது அவதானத்துடன் விசாரிக்கப்பட வேண்டியவை. ஏற்கனவே போதிய விசாரணை நடந்ததாக கூறப்படுவதை யாரும் பொருட்படுத்தவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் சில தன்னிச்சையான வெடிப்பின் விளைவு என்று யாரும் நம்பவில்லை. கவலை உயிர்த்த ஞாயிறுவுக்கு அப்பாற்பட்டது. மற்றும் அதற்கு முன்னும் பின்னுமான அனைத்து அரசியல் குற்றங்களையும் உள்ளடக்கியது.

## அரசியல் வன்முறை மற்றும் அரசியல் குற்றங்கள்

ஜே.வி.பி கிளர்ச்சி மற்றும் புலிகளின் 'யுத்தம்' ஆகியவற்றின் போது இலங்கையில் இடம்பெற்ற கொலைக்களங்களில் இருந்து இலங்கையின் அரசியல் குற்றங்களின் வலையை தனித்து பார்க்கக் கூடாது. இரண்டு போராட்டங்களிலும் ஏராளமான மற்றும் மன்னிக்க முடியாத தனிப்பட்ட கொலைகளும் அடங்கும்.

ஆயினும் கடந்த கால அரசியல் வன்முறைகளுக்கும் அரசியல் வன்முறைகள் முடிவுக்கு வந்த பின்னரும் பெருகிவரும் அரசியல் குற்றங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. 20 ஆம் நூற்றாண்டின் கடைசி பத்தாண்டுகள் அரசியல் வன்முறையில் மூழ்கின. இந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்கள் அரசியல் குற்றங்களால் சிதைக்கப்பட்டு வருகின்றன.





ஜே.வி.பி இப்போது மறுபிறவி எடுத்துள்ளது மற்றும் இப்போது அரசியல் முறைமைக்குள் நம்பிக்கையின் முகவராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது – முறைமைக்கு எதிரான சீர்குலைவு முகவராக அதன் முந்தைய பாத்திரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு உலகமாகும்.

புலிகளின் போராட்டம் இப்போது வரலாறானது. ஆனால் அதன் மரபு நல்லிணக்கம் தொடர்பான அரசியலில் தொடர்கிறது. தொல்பொருளியல் போர்வையில் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுவதை எல்லோரும் உணரலாம். அரசியல் வன்முறைகள் முடிவுக்கு வந்ததாக சொல்லப்பட்டாலும், அது உருவாக்கிய வன்முறைக் கலாசாரமும், அது திரட்டிய வன்முறையின் வளங்களும், அரசியல் குற்றங்கள் தோன்றுவதற்கும் அவை தொடர்வதற்கும் வழிவகுத்தன.

ஜே.வி.பி .யோ அல்லது புலிகளின் போராட்டமோ எதுவாக இருந்தாலும், அது அரசியல் குடும்பங்களின் நலன்களுக்காகவோ அல்லது அரசியல் குடும்பங்கள் அல்லது முறைமைகளின் தேர்தல் ஆதாயங்களுக்காகவோ நடத்தப்படவில்லை. இந்த குணாதிசயத்தை வன்முறையின் மீட்டெடுக்கும் அம்சமாகவோ அல்லது அதற்கான நியாயத்தையோ நான் பரிந்துரைக்கவில்லை.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் குடும்பங்களின் நலன்களை உள்ளடக்கிய, இப்போது வாழ்க்கையின் உண்மையாகிவிட்ட அரசியல் குற்றங்களின் வலைக்கு மாறாக மட்டுமே. சிலர் தேசிய அளவில் மிகவும் முக்கியமானவர்கள். மற்றவர்கள் உள்ளூர் மட்டங்களில் தேசிய புகழ் 3இல்லாமல் ஆட்சி செய்கிறார்கள்.

அரசியல் வன்முறைகள் மற்றும் அரசியல் குற்றங்களை வேறுபடுத்தி பார்க்கும்போது, 2019 உயிர்த்த ஞாயிறு துயரங்கள் இரண்டையும் ஒன்றிணைப்பதையும் பார்க்க முடியும். உண்மையில், புலிகளின் பெயரைச் சொல்லி அரசியல் வன்முறையில் ஈடுபட்டவர்களையும், புலிகளுக்கு எதிரான அரசின் வன்முறைக்கு தலைமை தாங்கியவர்களையும் இந்தக் குற்றச்சாட்டுகளின் வலை ஒன்றிணைத்துள்ளது.

ராஜபக்ச குடும்பம் மற்றும் புலிகளிடமிருந்து விலகியவர்களின் குறிப்பிட்ட சந்திப்பு 2019 உயிர்த்த ஞாயிற்றுக்கிழமைக்கு நீண்ட காலத்திற்கு முன்பே தொடங்கியது மற்றும் அது தொடர்கிறது. இப்போது சனல் 4 ஆல் குற்றம் சாட்டப்படும் அவர்களுக்கிடையிலான தொடர்பை சர்வதேச மன்னிப்புச் சபை 'ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கின் சரிவு' என்று அழைத்ததன் மூலம் மிகவும் திட்டவட்டமாக அம்பலப்படுத்தியது.

2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு பேராலயத்தில் நத்தார் ஆராதனைக்கு சென்றிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் எஸ். சந்திரகாந்தன் [பிள்ளையான்] என்ற புலிகளின் பெயரைச் சொல்லி வன்முறையில் ஈடுபடும் ஒருவர் நான்கு பேருடன் விடுதலை செய்யப்பட்டார்.

சர்ச்சைக்குரிய விடுதலையைத் தொடர்ந்து, சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை கைவிடுவதாக சட்டமா அதிபர் அறிவித்தார். சந்திரகாந்தன் அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகி தற்போது இராஜாங்க அமைச்சராக உள்ளார். கொலைக் குற்றச்சாட்டை முறியடித்து பாராளுமன்றத்திற்குள் ராஜபக்சக்களால் நுழையச் செய்யப் பட்டவர் அவர் மட்டும் அல்ல . இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பிரேம்லால் ஜயசேகரவும் அத்தகைய பயனாளி. இரண்டு பேரும் குற்றங்களை மூடிமறைப்பதைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை. மாறாக ஒரு காலத்தில் 'அரசு அதிகாரத்தின் உச்சக் கருவியாக' இருந்த பாராளுமன்றமே அவற்றைக் கொண்டாடுவதைக் குறிக்கிறது.






# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## பின்னணி கதையை வெளிப்படுத்துவதாகக் கூறும் சனல் 4

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னணியில் உள்ள கதையை வெளிப்படுத்துவதாகக் கூறும் சனல் 4 விவரணக் காணொளி, அந்தத் தாக்குதல்களுக்கு பின்னணியில் இருந்திருக்கக்கூடியவர் யார்? அவர்கள் ஏன் அவ்வாறு செய்தார்கள்? என்பது பற்றி நாட்டில் விவாதத்தை மீண்டும் வைத்திருக்கிறது. இதற்கு விடை காண்பது சுலபமானது அல்ல.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்களினதும் அதில் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களினதும் அடையாளங்கள் தெரிந்தவையே. எட்டு தற்கொலைக் குண்டுதாரிகள் மரணமடைந்தார்கள். 269 அப்பாவி குடிமக்களும் மரணமடைந்தா'கள். குண்டுதாரிகள் சகலரும் முஸ்லிம்கள். அவர்களில் சிலர் மிகவும் படித்தவர்கள் என்பதுடன் வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக நம்பிய ஒரு இலட்சியத்துக்காக அன்றி மற்றும்படி அவர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கமாட்டார்கள்.

பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள, தமிழ்க் கத்தோலிக்கர்கள். 45 பேர் வெளிநாட்டவர்கள். பலியானவர்களில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களும் அடங்குவர். அவர்களில் மூவர் ஸ்கொட்லாந்தின் மிகப்பெரிய நிலச்சுவாந்தாரின் மூன்று பிள்ளைகள்.

எந்தவிதத்தில் நோக்கினாலும் இது சர்வதேச விசாரணையையும் சர்வதேச நீதியையும் வேண்டிநிற்கும் ஒரு சர்வதேசக் குற்றச்செயல். பதவியில் இருந்த அரசாங்கத்தை மலினப்படுத்துவதன் மூலமாக முன்னர் ஆட்சியில் இருந்தவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்குக் களத்தை அமைப்பதற்குச் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினார்கள் என்ற ஒரு கதையை சனல் 4 விவரணக் காணொளியைத் தயாரித்தவர்கள் கூறுகிறார்கள்.

நாட்டின் தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பின் பலவீனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் 7 மாதங்கள் கழித்து நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கு வழிவகுத்தது. வெளிநாடுகளில் தஞ்சம் கோருபவர்கள் சிலர் கூறும் விபரங்களைக் கொண்டிருக்கும் சனல் 4 விவரணக் காணொளி நாட்டின் புலனாய்வு இயந்திரத்தின் சில பிரிவினர் கோட்டபாய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றிபெறுவதற்கு வசதியான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு தற்கொலைக் குண்டுதாரிகளுடன் சேர்ந்து





சதி செய்தார்கள் என்று கூறுகிறது.

ஈவிரக்கமற்ற இந்தச் குற்றச்செயலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படுபவர்களும் மற்றவர்களும், கோட்டபாய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றிபெறுவதற்கு உதவ தற்கொலைக் குண்டுதாரிகள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருப்பார்கள் என்று கூறுவதில் தர்க்க நியாயம் இல்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர் தனது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது முஸ்லிம்களுக்கு எதிரான பெரிய கலவரங்களினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கை முஸ்லிம்கள் அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று சர்வ வல்லமையும் கொண்டவராக வருவதை விரும்பியிருக்கமுடியாது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் பகைமை வரலாறு ஒன்று இல்லாதபோது தற்கொலைக் குண்டுதாரிகள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சமூகங்களை இலக்காகத் தெரிவு செய்திருப்பதற்கான சாத்தியத்தையும் மேற்சொன்ன காரணம் இல்லாமல் செய்கிறது.

அவர்கள் ஏதாவது ஒரு சமூகத்தை தங்கள் தாக்குதல்களுக்கு இலக்காக தெரிவுசெய்வதாக இருந்தால் அது பௌத்தர்களாகவே இருந்திருக்கக்கூடும். பௌத்தர்களில் சில பிரிவினர் பிக்குமாரின் தலைமையில் பல சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்களில் ஈடுபட்டார்கள். அதனால் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் 'வெளிச்சூத்திரதாரி' இருந்திருக்கவேண்டும்.

## தோல்விகண்ட விசாரணைகள்

குண்டுத் தாக்குதல்களுக்குப் பிறகு குறைந்தபட்சம் இரு மாதங்களாக நாட்டில், குறிப்பாக நகரப் பகுதிகளில் பீதி நிலவியது என்பது அந்தத் தாக்குதல்களில் இருந்த அதிர்ச்சிகரமான அம்சத்தை வெளிக்காட்டியது. ஏக காலத்தில் ஒரே மாதிரியான ஆறு குண்டுத் தாக்குதல்களுக்கு வழிவகுத்த மிகவும் கச்சிதமும் நுட்பமும் நிறைந்த திட்டமிடல் அதை நடத்தியவர்களிடம் முப்பது வருடகால

> **சர்வதேச பங்கேற்புடனான அத்தகைய விசாரணை உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் மாத்திரமல்ல உள்நாட்டுப்போர் மற்றும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பிலும் பொறுப்புக்கூறலையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் மெய்யான நோக்கங்களில் இலங்கை மக்களும் பாதிக்கப்பட்டவர்களும் சர்வதேச சமூகமும் நம்பிக்கை வைக்க உதவும்.**

மாக அரசாங்கத்துக்கு எதிராகப் போரில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளிடமும் இருந்திராத உட்கட்டமைப்பு ஒன்று இருந்தது என்பதை உணர்த்தியது.

இதை உணர்ந்த நிலையில், குண்டுத் தாக்குதல்களுக்குப் பிறகு நீண்டகாலமாக மக்கள் மத்தியில் ஒரு நெருக்கடிக்குள் வாழ்கிறோம் என்ற எண்ணம் தொடர்ந்து நீடித்தது. கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல ஏனைய சமூகத்தவர்கள் மத்தியிலும் அடுத்த இலக்கு தாங்களாக இருக்கக்கூடுமோ என்ற பீதி நிலவியது.

அத்தகைய பயங்கரமான உட்கட்டமைப்பை பெரும்பாலும் கொண்டிருக்கக் கூடியவர்கள் அந்த நேரத்தில் ஐரோப்பாவையும் மத்திய கிழக்கையும் இலக்கு வைத்து குண்டுத்தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய அரசு) இயக்கத்தவர்களாகவே இருக்கமுடியும் என்று நம்பப்பட்டது. ஆனால், பதற்ற நிலை தணிந்து அரசாங்கம் மாறியதும் அந்த இயக்கம் இலங்கையில் எந்த அக்கறையையும் காட்டவுமில்லை. எந்த வடிவிலும் அது மீளத் தோன்றவுமில்லை.

உயிர்த்த குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னரான கடந்த நான்கு வருட காலப்பகுதியில் அரசாங்கம் பல்வேறு விசாரணைகளை நடத்தியது. குண்டுத் தாக்குதல்களுக்குப் பிறகு விரைவாக மே 22, 2019 சபாநாயகர் நியமித்த நாடாளுமன்ற தெரிவுக்குழு 23 அக்டோபர் 2019 அதன் அறிக்கையைக் கையளித்தது. அந்தக் குழுவில் பல்வேறு அரசியல் கட்சிகள் அங்கம் வகித்த நிலையில் அதனால் கருத்தொருமிப்புடனான முடிவுகளுக்கு வருவது சாத்தியமில்லாமல் போய்விட்டது. இது எதிர்பார்த்திருக்கக்கூடியதே.

அதைத் தொடர்ந்து 22 செப்டெம்பர் 2019 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்தார். அது சிரமம் மிகுந்த விசாரணைகளுக்குப் பிறகு பல தொகுதிகள் கொண்ட அறிக்கையை பெப்ரவரி 1, 2021 கையளித்தது. அந்த அறிக்கையை அரசாங்கம் பொதுமக்களுக்கு வெளியிடாதது மாத்திரமல்ல, முழு அறிக்கையையும் கோரிய திருச்சபைகளுக்கு கூட கொடுக்கவில்லை.

அதேவேளை, அடுத்து முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் விசாரணைகள் மோசமான திருப்பத்தை எடுத்தது. உயர்மட்ட பொலிஸ் விசாரணையாளர்களில் சிலர் தாங்கள் சட்டமீறல்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்களில் ஒருவர் தான் கொடுமைப்படுத்தப்படக்கூடும் என்ற பயத்தில் நாட்டைவிட்டு தப்பியோடினார். இந்த விசாரணையாளரின் குரலை சனல் 4 விவரணக் காணொளியில் கேட்கக்கூடியதாக இருந்தது.

1971ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கை பாரிய வன்முறைக் காலப்பகுதிகளுக்கு முகங்கொடுத்தது. அவற்றின் உண்மையும் பொறுப்புக்கூறலும் இன்னமும் மறைந்தே கிடக்கிறது. 1988/ 1989 கிளர்ச்சிக் காலப்பகுதியில் இறந்தவர்கள் அல்லது காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இதுவரை தெரியாது. அது ஆயிரக்கணக்கில் இருக்கலாம்.

அந்தக் கிளர்ச்சிகளில் உயிர்தப்பி வாழ்பவர்களும் அவர்களின் குடும்பங்களும் இன்னமும் அந்த நினைவுகளுடனேயே வாழ்கிறார்கள். உண்மையும் நீதியும் வெளிக்கிளம்பும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், நான்கு தசாப்தங்கள் கடந்தும் எதையும் காணமுடியவில்லை.

2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த உள்நாட்டுப்



போரில் இதை விடவும் கூடுதல் எண்ணிக்கையானவர்கள் மரணமடைந்தார்கள், காணாமல்போனார்கள். அவர்களின் குடும்பங்களும் அந்த நினைவுகளுடன் வாழ்வதுடன் உண்மை கண்டறியப்பட்டு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் கொண்டிருக்கிறார்கள்.

## நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புதல்

2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்தது முதல் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கேள்விக்கு உட்படுத்தப்படும் சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருந்துவருகிறது. 2015 தொடக்கம் 2018 வரை ஒரு குறுகிய காலப்பகுதிக்கு ஐக்கிய நாடுகள் தீர்மானங்களுடன் ஒத்துழைப்பதற்கு இலங்கை இணங்கியதுடன் நாட்டுக்கு அனுகூலமான அறிவிப்புகளையும் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், மீண்டும் இலங்கை பாதகமான நிலைமைக்கு திரும்பியிருக்கிறது போன்று தெரிகிறது.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் மிகவும் அடிப்படையானது பொறுப்புக்கூறல் இன்மையாகும் என்று குறிப்பிட்டார். போர்க் காலப்பகுதியின் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களுக்கு மேலதிகமாக விசாரிக்கப்படவேண்டிய மக்களுக்கு எதிரான விவகாரங்களின் பட்டியலில் ஐக்கிய நாடுகள் முறைமை இப்போது உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களையும் திடீர் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களையும் சேர்த்திருக்கிறது. இவை உண்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டியவையாகின்றன. நம்பிக்கையும் நல்லெண்ணமும் இன்மையே இலங்கையில் இன்று ஆட்சி முறையின் பிரதான பிரச்சினையாகும். இதை மீளக்கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். மக்களும் அரசாங்கத்தை நம்பவில்லை,அரசாங்கமும் மக்களை நம்பவில்லை என்றே தோன்றுகிறது.

நம்பிக்கை ஏற்படவேண்டுமானால் வெளிப்படைத் தன்மையும் உண்மையும் இருக்கவேண்டியது அவசியமாகும். உண்மையைக் கண்டறிவதற்கு அரசாங்கம் முன்னெடுத்த விசாரணைகளின் தொடர்ச்சியான தோல்விகளின் விளைவாக அரசாங்கத்தில் நம்பிக்கையில்லாமல் போய்விட்டது. அதனால், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு விசாரணையையும் மக்கள் அக்கறையுடன் நோக்கப்போவதில்லை. அதை காலத்தை கடத்தும் ஒரு செயலாகவே அவர்கள் கருதுவார்கள்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை நியமித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் சூத்திரதாரி ஒருவர் இருந்ததாக முன்னாள் சட்டமா அதிபரினால் கூறப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதற்கான தனது உத்தேசத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த இரு விசாரணைகள் நிறைவுபெற்றதும் அவற்றின் அறிக்கைகள் அடுத்து முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஐயகோ, ஜனாதிபதியின் இந்த முன்மொழிவுகள் ஏற்கெனவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படாத விசாரணைக் குழுக்களையும் அவற்றின் அறிக்கைகளையும் ஒத்தவையாகவே தெரிகிறது.

முன்னைய உள்நாட்டு விசாரணைகளின் ஊடாக குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்திருக்கக்கூடியவர்கள் அடையாளம் காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களைப் பொறுப்புக்கூறவைக்கத் தவறியமையே சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக எழுவதற்கு வழிவகுத்தது. உண்மையையும் நீதியையும் பெறுவதற்கு சர்வதேச விசாரணையை பிரதானமாக கத்தோலிக்க திருச்சபையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் கோரிநிற்கின்றன.

சனல் 4 விவரணக் காணொளி வெளியான பிறகு சர்வதேச ஆதரவுடனான விசாரணைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கோரிக்கை விடுத்திருக்கிறார். உண்மை வெளிவருவதற்கு எதிராக வலிமையான சக்திகள் அணிதிரண்டு நிற்பதற்கு மத்தியில், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் உண்மையில் பயங்கரவாதிகளின் செயலா அல்லது சிலரை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்கு தீட்டப்பட்ட சதித்திட்டம் ஒன்றின் விளைவா என்பதை மக்கள் தெரிந்துகொள்ளக்கூடியதாக சந்தேகங்களைத் தெளிவுபடுத்த நம்பகமான விசாரணை தேவை என்று துணிச்சலுடன் அவர் கூறியிருக்கிறார்.

அறகலய போராட்ட இயக்கத்தினால் பதவியில் இருந்து விரட்டப்பட்ட ஜனாதிபதிக்குப் பதிலாக பதவிக்கு வந்த ஜனாதிபதியும் அதே பாதையைத் தொடருவது ஒரு முரண்நகையாகும் என்றும் பிரேமதாச கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும் பாதிக்கப்பட்டவர்களினதும் கத்தோலிக்கத் திருச்சபை போன்ற அவர்களின் பிரதிநிதிகளினதும் துடிப்பான பங்கேற்புடன் சர்வதேச ஆதரவுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளையும் உள்ளடக்கிய சுயாதீனமானதும் வெளிப்படையானதுமான அகல்விரிவான விசாரணையொன்று நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். ஐக்கிய நாடுகளின் இந்த கோரிக்கை உள்நாட்டுப் போரின் போது இறந்துபோன அல்லது காணாமல்போன ஆயிரக்கணக்கானவர்களின் கதி பற்றிய உண்மையைக் கண்டறிய தமிழ் மக்கள் கோருகின்ற விசாரணையை ஒத்ததாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டவர்கள்




உண்மை வெளிவருவதை விரும்பவில்லை என்ற அறிவுபூர்வமான முடிவுக்கே வரவேண்டி இருக்கிறது.

சர்வதேச பங்கேற்புடனான அத்தகைய விசாரணை உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் மாத்திரமல்ல உள்நாட்டுப்போர் மற்றும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பிலும் பொறுப்புக்கூறலையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் மெய்யான நோக்கங்களில் இலங்கை மக்களும் பாதிக்கப்பட்டவர்களும் சர்வதேச சமூகமும் நம்பிக்கை வைக்க உதவும்.

அத்தகைய விசாரணை ஒரு மேலதிக பயனாக, சர்வதேச உதவி உச்சபட்சமாக தேவைப்படுகின்ற ஒரு நேரத்தில் நாட்டுக்கு உதவமுடியும்.



# உலகை அச்சுறுத்தும் சிறுவர் துஷ்பிரயோகம்



வி.தீபன்ராஜ்

இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு சமூகப் பிரச்சினைதான் சிறுவர் துஷ்பிரயோகம். பொதுவாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், அவர்களின் அடிப்படை உரிமைகளை மறுத்தல் உள்ளிட்ட அம்சங்கள் இதில் உள்ளடங்கும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் இன்றைய காலகட்டத்தில் துஷ்பிரயோகம் என்பது சர்வ சாதாரண விடயமாக ஆகிவிட்டது. இதற்கான காரணம் என்ன? தீர்வுதான் என்ன? என்பதை அறியாமல் பாதிக்கப்படும் பொது மக்களின் கதை தொடர்கிறது.

பிள்ளைகளின் சுகாதாரத்திற்கும், முன்னேற்றத்திற்கும் பாதிப்பை நிச்சயமாக ஏற்படுத்தக்கூடியவாறு அநாவசியமாக துன்பத்திற்கு உள்ளாக்குவதையோ, அல்லது சிறுவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதை தவிர்ப்பதையோ சிறுவர் துஷ்பிரயோகம் எனக் குறிப்பிடுவர்.

இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தகவல்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

பொதுவாக சிறுவர் சிறுமியரை வயதில் மூத்தவர்கள், தமது பாலியல் வக்கிரங்களுக்கு இரையாக்கும் இழி செயலையே சிறுவர் துஷ்பிரயோகம் என்ற பதத்தினூடாக இங்கு நோக்குகிறோம். வயதில் முதிர்ந்த ஒருவர், சிறுவர், சிறுமியரிடம் ஆபாசமாகப் பேசுவது, ஆபாசப் படங்களைக் காட்டுவது, அந்தரங்க உறுப்புக்களைத் தொடுவது அல்லது அன்போடு அரவணைப்பது போல் தொட்டுத் தழுவித் தனது ஆசையைத் தீர்த்துக்கொள்வது போன்ற இழிவு செயல்களை இது குறிக்கும்

சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படல், வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்படல், அச்சுறுத்தப்படல் மற்றும் சிறுவர்க்கான அடிப்படை உரிமைகள் பல்வேறு வகைகளிலும் மீறப்படல் என்று கவலை தரும் விடயங்கள் தொடர்கதையாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதேவேளை, இலங்கைப் பெண்களும், சிறார்களும், உள்நாட்டிலும், வெளிநாடு





களிலும் தொடர்ந்தும் பாலியல் அடிமைகளாக பயன்படுத்தப்படும் நிலைமை காணப்படுவதாக அதிகம் கருத்துகள் வெளியாகிக்கொண்டு இருகின்றது.

வெளிநாட்டு அறிக்கையொன்றில் பல இலங்கை சார்த்த விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. மத்திய கிழக்கு நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் இவ்வாறு பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இலங்கையில் பல விபச்சார விடுதிகளில் இலங்கை சிறார்கள் மற்றும் பெண்களுடன் தாய்லாந்து, சீனா, தெற்காசிய நாடுகள், ஐரோப்பா மற்றும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த பெண்களும் பலவந்தமாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவது குறித்து தெரிய வந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது..

குறிப்பாக பெண்களை விட இலங்கையை சேர்ந்த ஆண் சிறுவர்கள் பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்படுவது அதிகமாகக் காணப்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இன்று மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் நாட்டின் நற்பெயருக்கும் பெரும் சவாலாக இருக்கும் சிறுவர் மற்றும் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு சமூக, அரசியல், பொருளாதார சட்ட ரீதியான பல காரணங்கள் மட்டுமல்லாமல் வேறுபல காரணங்களும் இருப்பதாக பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இதேவேளை, ஒரு சில பத்திரிகைகள் மற்றும் ஊடகக்குழு போன்றவற்றால் இணையத்தளம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பங்குகொண்ட 70 சதவீதமானவர்கள், சிறுவர் பாலியல் வன்புணர்வில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். சட்டங்கள் கடுமையானால் தான் தவறுகள் குறையும் என்பதை உணர்த்தும் வகையில் இதற்கான தேர்வு எட்டப்பட வேண்டும். தேர்வு என்பது ஒரு மாற்றமாகவும் சிலரின் மறுவாழ்வாகவும் அமைய வேண்டும். இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குறுகிய காலத்தின் பின் சட்டங்களில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி அரசியல் ஆதரவுடன் சந்தோசமாக உள்நாட்டில் மட்டுமல்லாது வெளி நாடுகளிலும் சுற்றித் திரிவதை நாம் கண் முன்னே கண்டு கொண்டிருக்கின்றோம்.

ஒரு சில பத்திரிகைகள் மற்றும் ஊடகக்குழு போன்றவற்றால் இணையத்தளம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பங்குகொண்ட 70 சதவீதமானவர்கள், சிறுவர் பாலியல் வன்புணர்வில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். சட்டங்கள் கடுமையானால் தான் தவறுகள் குறையும் என்பதை உணர்த்தும் வகையில் இதற்கான தேர்வு எட்டப்பட வேண்டும். தேர்வு என்பது ஒரு மாற்றமாகவும் சிலரின் மறுவாழ்வாகவும் அமைய வேண்டும்.

இலங்கையில் மரண தண்டனை என்பது வழக்கத்தில் இல்லாத போதிலும் சிறுவர் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனை வழங்குவது கொண்டுவரப்பட வேண்டும்.

நமது சமுக கண்ணோட்டம் பாலியலைத் தவறாக பார்ப்பதாலேயே இவ்வாறான தவறுகள் மூடி மறைக்கப் படுகின்றன. இது அவலமாகவும், பாதிக்கப்பட்ட பிள்ளைகள் பின்பு இழிச்சொல்லுக்கு ஆளாவதும் கூட இவ்வாறான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் இடம் பெறக் காரணமாகின்றது. ஆகவே, இவ்வாறான பாலியல் வன்முறைகளை முற்று முழுதாக நிறுத்த முடியா விட்டாலும், தவறுகள் நிகழாத வண்ணம் தடுக்கலாம். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் உங்கள் கைகளில். நாளைய எதிர்காலமும் உங்கள் கைகளில். சிறுவர் வன்கொடுமை தடுப்போம். சிறுவர்களை பாதுகாப்போம்.

எது எப்படியாயினும் இளம் சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு அவர்களின் உரிமைகள் தொடர்பான தேசிய விழிப்புணர்வையும்



ஏற்படுத்த வேண்டும். மத வழிபாடுகளில் அதிக ஈடுபாடும், நல்ல பண்புகள், சுய கட்டுப்பாடு போன்ற விடயங்களை எடுத்துக்காட்டாகவும் கொள்ள வேண்டும்.

மேலும், சிறுவர்களைப் பாதுகாப்பவர்களும் பராமரிப்பவர்களும் வேலியே பயிரை மேயும் கதையாகிவிடக் கூடாது. சிறுவர் துஷ்பிரயோக விடயத்தில் அனைத்து இன மக்களும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இம்சைப்படுத்தும் நபர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். எது எப்படியாயினும் தண்டனையில் யாருக்கும் பாரபட்சம் காட்டக் கூடாது.

தண்டனைகள் மிக மிகக் கடுமையாக்கப்பட வேண்டும்.குற்றங்களைக் களையும் நடவடிக்கைகள் வீட்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். நாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களைத் தடுக்க வேண்டுமானால் பொது மக்கள், பொலிஸ், நீதித்துறை ஆகிய மூன்றும் ஒரே கோட்டில் பயணிக்க வேண்டும் என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்வது அவசியம்.

க.பிரசன்னா



# சமூக வலைத்தளங்களில் சிக்கும் சிறார்கள்

உலக சனத்தொகையில் பாதியளவானோர் சமூகவலைத் தளங்களில் அங்கம் பெற்றுள்ளனர். இவ்வாறு சமூக வலைத்தளங்களில் இணைவதற்கு கட்டுப்பாடுகள் என்பது கடுமையானதாக இல்லை. குறிப்பாக வயதெல்லை. தற்போது சிறுப ராயத்தினர் சமூக வலைத்தளங்களினால் அதிகளவு பிரச்சினைகளை எதிர்கொள்வதால் வயதுக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துவதற்கு சில நாடுகள் இணங்கியுள்ளன.

இலங்கையும் பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் கணக்கு வைத் திருப்போருக்கு வயது கட்டுப்பாட்டைக் கொண்டு வர முனைந் திருக்கிறது. இது வரவேற்கத்தக்க விடயமெனினும் இலங்கை குறிப்பிட்டுள்ள கட்டுப்பாட்டு நடைமுறைகளிலும் சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன.

சமூக வலைத்தளங்களை தடை செய்வதோ அல்லது கட்டுப்படுத் துவதோ பாவனையாளர்களை உளவியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிப்பதாகவே இருக்கும். சீனாவில் பேஸ்புக் தடை செய்யப்பட்டிருந்தாலும் அதற்கான மாற்று வழிகள் அந்நாட்டு




மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கையில் அவ்வாறு சாத்தியப்படுமா? வயதுக் கட்டுப்பாட்டை அறிவித்து விட்டால் சிறுவர் பயனர்களையும் போலி கணக்குகளையும் தடுத்து விட முடியுமா?

இன்று இணையத்தை பயன்படுத்த அதிகமான வாய்ப்புகள் சிறுவர்கள் முதல் அனைவருக்கும் இருக்கிறது. தொலைபேசி, இணைய சேவை நிலையங்கள் என்பவற்றில் முறையாகவும், முறை கேடாகவும் அனைவரும் இணையத்தை பயன்படுத்தக் கூடிய நிலை இருக்கையில் வெறுமனே வீட்டுக்குள் இருக்கும் கணணியை கண்காணிப்பதால் மட்டும் இணைய துஷ்பிரயோகங்களை தடுக்க முடியாது.

இவ்வாறு இணைய சேவை பரந்துபட்டு இருக்கையில் சமூக வலைத்தள பாவனையை மட்டும் மட்டுப்படுத்த முடியுமா? ஐரோப்பா மற்றும் ஏனைய சில மேற்குலக நாடுகளில் பேஸ்புக் கணக்கை ஆரம்பிக்க தேவையான வயதெல்லை 13 இல் இருந்து 16 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனைப் பின்பற்றி இலங்கையும் செயற்படப் போவதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இது பேஸ்புக்குக்கு மட்டும் உள்ள தடையல்ல. ஸ்னப்சட், வட்ஸ் அப், இன்ஸ்டகிராம் ஆகிய சமூக வலைத்தளங்களுக்கும் பொருந்தும்.

ஆனால் முறையாக சிறுவர்கள் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத் தளங்களை துஷ்பிரயோகப்படுத்தும் வகையில் செயற்படுவதை தடுக்க பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களாலேயே முடியும். ஆனால் அவை சாத்தியமற்றவை. பெற்றோரே தம் பிள்ளைகளுக்கு தொலை பேசி, ஏனைய தொழில்நுட்ப சாதனங்களை வழங்கி இணைய பாவனையை ஊக்குவிக்கின்றனர். பின்னர் எவ்வாறு சமூக வலைத் தளங்களால் பிள்ளைகள் தடம்மாறுவதை தடுப்பது?

இலங்கை அரசு கூறுவதைப் போல வயதுக் கட்டுப்பாட்டை அமல் படுத்தினாலும் அவற்றை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமா? தற்போதும் வயதுக் கட்டுப்பாடு அமலில் உள்ள போதும் இலகுவாக



போலி கணக்குகளை உருவாக்க முடிகிறதே!

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் பேஸ்புக் நிறுவனமானது 17 வயதை பூர்த்தி செய்பவர்களுக்கே கணக்கை ஆரம்பிக்க முடியுமென கூறியிருந்த போதும் சிறுவர்களின் செயற்பாடுகளை பேஸ்புக் நிறுவனத்தால் குறைக்க முடியவில்லை. அதிகமான சமூக வலைத்தளங்கள், புதிய கணக்கினை ஆரம்பிக்கும் போது ஒருவரின் பிறந்த திகதியை கேட்கும். ஆனால், அவற்றை உறுதிப்படுத்த எந்த ஆதாரங்களையும் கேட்பதில்லை. இதனால் விரும்பிய வருடங்களை கொடுத்து கணக்கை ஆரம்பிக்கும் நிலைமை தற்போதும் இருக்கின்றது. இருப்பினும் சில வயது வந்தோருக்கான கேளிக்கை இணையத்தளங்கள் கடன் அட்டைகளின் இலக்கங்களை கோருவதால் போலிக் கணக்குகளை இனங்காண முடிகிறது.

ஆனால் இலங்கையில் போலிக் கணக்குகளை இனம் காண கடன் அட்டை இலக்கங்களை கோர முடியாது. இலங்கையில் உயர்தர மக்கள் பாவனைக்கே கடன் அட்டை என்ற நிலை காணப்படுகிறது. இதனால் பாவனையாளர்களின் தொகை குறையும் வாய்ப்புள்ளது. ஆனால் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உட்புகுத்தி கணக்கை ஆரம்பிக்கும் முறை பற்றி கொஞ்சம் பரிசீலனை செய்து பார்க்கலாம். அதுவும் இலங்கையில் சாத்தியமானதா? உலகம் முழுவதும் 1.8 பில்லியன் பேஸ்புக் பயனர்கள் இருக்கின்றனர். இவற்றில் ஒவ்வொருவரும் நேர்மையானவர்கள் என்று கூறிவிட முடியாது.

வலைத்தளங்கள் வளர்ச்சி பெற்று வந்தாலும் மிரட்டும் வகையிலானஅல்லது போலிக் கணக்குகளை தடுக்க முடியாதுள்ளது. இதனால் சமூக வலைத்தளங்கள் கடுமையாக பாதிக்கப்படுவதுடன் சர்வதேச நாடுகள் பாதுகாப்பு மற்றும் தீவிரவாத அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளன. பெரும்பாலான தீவிரவாத இயக்கங்கள் சமூக வலைத்தளங்களினூடே தமது பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறு அச்சம் மிகுந்த சூழ்நிலையில் சமூக வலைத்தளங்களும் சர்வதேச நாடுகளும் பயணிக்கின்றன.

**“சமூக வலைத்தளங்கள் தொடர்பில் பாடசாலைகளும் அதிக அக்கறை கொள்ள வேண்டும். பாடசாலை நேரங்களிலேயே மாணவர்களின் தொலைபேசி பாவனை அதிகமிருக்கின்றன. இவற்றை பாடசாலைகள் தடை செய்ய வேண்டும். அரசாங்கம் நடைமுறைப்படுத்த நினைக்கும் கட்டுப்பாடுகளால் துஷ்பிரயோகங்கள் குறைய வேண்டும். சிறுவர்கள் சமூக வலைத்தளங்களின் மீது கொண்டிருக்கும் எதிர்மறையான நிலைப்பாடு மாற்றப்பட வேண்டும். இவற்றில் குறைகள் தீர்க்கப்படும் பட்சத்தில் சமூக வலைத்தளங்களின் தரத்தை பேண முடியும்.”**

இவற்றைத் தடுக்க இலங்கை அரசும் வய தெல்லை தொடர்பான கருத்தை வெளியிட்டிருக்கிறது. இலங்கையில் சிறுவர்கள் மட்டும் என்றால் 18 வயதுக்குட்பட்டவர்கள். 16 வயதுக்கு உள்ளவர்கள் மட்டும் மேல் பேஸ்புக் கணக்கை பாவிக்கலாம் என்றால் ஏனைய

சிறுவர்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றனவே?

எந்த அடிப்படையில் இலங்கை அரசு வய தெல்லை கட்டுப்பாட்டை அறிவிக்கவுள்ளது என்பது தொடர்பான இறுதி தீர்மானம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இலங்கையில் 2.5 மில்லியன் மக்கள் பேஸ்புக் பாவனையாளர்களாக இருக்கின்றனர். இவற்றில் அதிகமானவை போலிக் கணக்குகளாகும். இவை போலி தகவல்கள் மற்றும் புகைப்படங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றன. இதுவொரு சைபர் குற்றமாகும்.

இலங்கை பொலிஸ் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் தொழில்நுட்ப பிரிவே இவை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் நிறுவனமாகும். இலங்கை கணனி அவசர தயார் நிலைக்குழு தனது அறிக்கையில்இவ்வருடம் செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் பேஸ்புக் சம்பந்தமான 2000 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

இக்குழுவின் சிரேஷ்ட தொழில்நுட்ப பாதுகாப்பு நிபுணர் ரொஷான் சந்ரகுப்தா தெரிவிக்கையில், பேஸ்புக் தொடர்பான முறைப்பாடுகளில் 60 வீதமானவை பெண்களிடமிருந்தும் 40 வீதமானவை ஆண்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவர்கள் 17 – 45 வயதிற்கிடைப்பட்டவர்கள்.





சிலர் போலியாக தயாரிக்கும் கணக்குக ளுக்கு உண்மையான புகைப்படத்தை பதிவிடுவதும் சட்டவிரோதமானதாகும். சிலர் போலிக் கணக்குகளை தயாரிப்ப தற்கு பல்வேறு காரணங்கள் இருப்பதா கவும் இவர் தெரிவித்துள்ளார்.

சிலர் பழிவாங்கும் நோக்கத்தோடும் சிலர் சட்ட விரோத செயலுக்கும் சிலர் ஒருவரை களங்கப்படுத்தும் நோக்கோடும் பேஸ்புக் கணக்கை போலியாக ஆரம் பிக்கின்றனர். 13 வயது சிறுவர்கள் கூட போலியான தகவல்களை பயன்ப டுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். உங்களுடைய தகவல்களும் அல்லது புகைப்படங்களும் இவ்வாறு முறைக் கேடாக பயன்படுத்தப்பட்டிருந்தால் குழு வின் 0112691692/ தொலைநகல் 011 2691064 இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.

பெரும்பாலானோர் தமது கணக்கை எவரும் பார்வையிடக் கூடிய வகையில் வைத்திருப்பதால் ஒருவரின் புகைப் படங்களை சகலரும் பார்வையிடக் கூடிய நிலையும், தரவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய நிலைமையும் காணப் படுவதால் பயனர்கள் தமது கணக்கு பாதுகாப்பில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். இலங்கையில் 1.2 மில்லியன் பேஸ்புக் பயனர்களில் 67 வீதமானோர் ஆண்களாகவும் 33 வீதமானோர் பெண் களாகவும் இருக்கின்றனர். பேஸ்புக்கில் பதிவேற்றப்படும் 70 வீதமான புகைப்ப டங்கள், வீடியோக்கள் என்பன காதலின் ஒரு பகுதியாக இருக்கிறன. 20 வீதமான கணக்குகள் போலியானவை. 5 வீதமான கணக்குகள் நிர்வாணப் படங்கள், வீடி யோக்கள் என்பவற்றை வெளியிட்டு மிரட்டுவதாகவும் 5 வீதமானவை ஊடு ருவப் பட்ட கணக்குகளாகவும் இருக் கின்றன. இவ்வாறு இலங்கையிலே பேஸ்புக் நிலைமை மோசமாக இருக்கையில் சர்வதேச கணக்குகள் எவ்வாறு அமைந்திருக்கும்?

**“வலைத்தளங்கள் வளர்ச்சி பெற்று வந்தாலும் மிரட்டும் வகையிலானஅல்லது போலிக் கணக்குகளை தடுக்க முடியாதுள்ளது. இதனால் சமூக வலைத்தளங்கள் கடுமையாக பாதிக்கப்படுவதுடன் சர்வதேச நாடுகள் பாதுகாப்பு மற்றும் தீவிரவாத அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளன. பெரும்பாலான தீவிரவாத இயக்கங்கள் சமூக வலைத்தளங்களினூடே தமது பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறு அச்சம் மிகுந்த சூழ்நிலையில் சமூக வலைத்தளங்களும் சர்வதேச நாடுகளும் பயணிக்கின்றன”**

எனவே கணக்குகளை உருவாக்கும் போதும் அதனை பயன்படுத்தும் போதும் அவதானமாக இருப்பதுடன் பின்வரும் விடயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். யார் உங்களை நண்பராக அடைகிறார், கணக்குத் தகவல்களை பரிசோதித்தல், நாம் ஏன் பேஸ்புக்கை பயன்ப டுத்துகிறோம், கடவுச் சொல் பாதுகாப்பானதா?, நாம் எங்கிருந்து கணக்கினை திறக்கிறோம், பதிவேற்றும் விடயங்களில் கவனமாக இருத்தல், கணக்கு விபரம் திருடப்படுதல், உடனடியாக முறையிடுதல், தொலைபேசிகளை பாதுகாத் தல், சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்தல் போன்ற ஒவ்வொரு விடயங்களையும் சமூக வலைத்தளங்களை பாவிக்கும் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை அரசாங்கம் சமூக வலைத்தளங் களை பாவிப்போருக்கான ஒழுக்கக் கோவைக ளையும் வயதுக் கட்டுப்பாட்டையும் உரிமைகள் மீறப்படாத வகையில் அமுல்படுத்த வேண்டும். இத்திட்டத்திற்கு சமூக வலைத்தள பயனர்க ளின் ஆலோசனைகளையும் கட்டாயம் பெற வேண்டும். மேலும் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் துஷ்பிரயோக நடவடிக்கைகளே அதன் பாதுகாப்புக்கும் கட்டுப் பாடுகளுக்கும் காரணமாக இருக்கின்றன. பாட சாலை மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் சீரழிவது தொடர்பில் பெற்றோரே நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுவாக பயனர்கள் தமது கணக்குகளின் பாதுகாப்பில் அக்கறை கொள்ளு தல் வேண்டும்.


சமூக வலைத்தளங்கள் தொடர்பில் பாட சாலைகளும் அதிக அக்கறை கொள்ள வேண் டும். பாடசாலை நேரங்களிலேயே மாணவர்களின் தொலைபேசி பாவனை அதிகமிருக்கின்றன. இவற்றை பாடசாலைகள் தடை செய்ய வேண் டும். அரசாங்கம் நடைமுறைப்படுத்த நினைக் கும் கட்டுப்பாடுகளால் துஷ்பிரயோகங்கள் குறைய வேண்டும். சிறுவர்கள் சமூக வலைத் தளங்களின் மீது கொண்டிருக்கும் எதிர்மறை யான நிலைப்பாடு மாற்றப்பட வேண்டும். இவற் றில் குறைகள் தீர்க்கப்படும் பட்சத்தில் சமூக வலைத்தளங்களின் தரத்தை பேண முடியும்.





## பூகோளமயமாதலின் விளைவினால்

# கலாசாரப் பண்பாடு அழிவடைகின்றதா? ஊக்குவிக்கப்படுகின்றதா?



**ராஜலிங்கம் மனோஜ்**
(ஊடக கற்கைகள் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

கலாசாரப் பண்பாடு என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும், அத்தகைய செயற்பாடுகளுக்கு சிறப்புத்தன்மைகளையும் எடுத்துக்காட்டும் பழக்கவழக்கங்களைக் குறிக்கின்றது. மொழி, உணவு, இசை, சமயநம்பிக்கை, தொழில்சார் தெரிவு, கருவிகள் போன்றவையும் பண்பாட்டையே எடுத்துக்காட்டுகின்றன.

சமூகவியலின் படி கலாசாரப் பண்பாடானது தனிமனிதனின் வாழ்வுடன் ஆழமாகத் தொடர்புபட்ட ஒரு விடயமாகும். இதனால் சமூகவியலின் படி கலாசாரப் பண்பாடு என்பது ‘வாழ்க்கை முறை’ என்பதாகும். ஒவ்வொரு மனிதசமுதாயத்திற்கும் ஒரு கலாசாரப் பண்பாடு உண்டு. அது அந்த சமுதாயத்தில் வாழ்கின்ற பெரும்பான்மை மக்களின் நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துகின்றது. கற்காலம் முதல் தற்காலம் வரையான கால ஓட்டத்தில் நாகரிகம் வளர வளர பண்பாடும் படிமலர்ச்சி பெற்றுள்ளது.

பூகோளமயமாக்கம் என்பது தொலைத்தொடர்பு, தகவல்தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய துறைகளின் முன்னேற்றங்களால் உந்தப்பட்டு சமூகங்களுக்கிடையில் அதிகரிக்கும் தொடர்பினையும் அதனால் ஏற்பட்டு வரும் ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலையைக் குறிக்கும் பதமாகும். அல்லது உலகமானது சுருங்கி ஒரு கிராமமாக செயற்படுவதைக் குறிக்கின்றது. உலகமானது ஒரு சிறிய இடமாக மாறிக் கொண்டிருக்கிறது.



இது உலகம் அளவில் சுருங்குகின்றது என்பதல்ல. மாறாக உலகமக்கள் பல தூரம் கடந்து, எல்லைகள் கடந்து பல்வேறு விடயங்களைக் குறித்து ஒருவருக்கொருவர் நெருக்கமடைகிறார்கள் என்பதாகும்.

இது பொருளாதாரம் அரசியல், பாதுகாப்பு, சூழல், சுகாதாரம், சமூகம், கலாசாரம் மற்றும் பண்பாடு என்பவற்றின் பிணைப்பினூடாக உலகமக்கள் நெருக்கமாவதுடன் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் நிலையும் அதிகரித்துள்ளது. இப் பூகோளமயமாதல் அல்லது உலகமயமாக்கலானது ஏனைய எல்லாத்துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தியதைப் போல கலாசாரப் பண்பாட்டுத் துறையிலும் தனது தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. பூகோளமயமாக்கலானது ‘உலகமக்கள் அனைவரையும் ஒரே பண்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சிக்கின்றது’.

இதனால் கலாசாரம் பண்பாடு பரிமாறிக் கொள்ளப்பட்டாலும் ஒரே வகையான கலாசாரப்பண்பாட்டை மக்கள் பின்பற்ற முற்படும் போது ஏனைய சமுதாய மக்களின் கலாசாரமும் பண்பாடும் அழிந்து போகக் கூடும். கலாசாரமும் பண்பாடும் காலம் கடந்தும் வாழும். ஆனால், அவற்றின் பல்வகைத்தன்மை





அழிந்து ஏதாவது ஒன்று மட்டுமே காணப்படும்.

உலகமயமாக்கல் சமூகம் மற்றும் அதன் தேவைகள் காரணமாக வெடித்ததன் விளைவு, இதன் காரணமாக பலநாடுகளின் கலாச்சாரம் ஒவ்வொரு நாடுகளிலும் பரவ ஆரம்பித்தன.

**உதாரணம்:**

- **திருமண முறைகள்**
- **உணவுப்பழக்கவழக்கங்கள்**
- **மொழிப் பயன்பாடு**
- **சடங்கு முறைகள்**

போன்ற கலாசாரங்கள் எல்லா நாடுகளிலும் ஊடுருவ ஆரம்பித்துப் பல்கலாசார முறை பரவலடைய ஆரம்பித்தது. மேற்கத்தைய கலாசாரம் மேற்குலக நாடுகளிலும் பரவி அனைவரும் அறியும்படி ஆகின. இவ்வாறு ஒரு இனத்தவரின் கலாசாரப்பண்பாடு மற்றவரிடையே பரவி உலகறியப்பட்டது நன்மையாகக் காணப்பட்டாலும் அதன் குறைகளை மக்கள் சுட்டிக்காட்ட முற்பட்டபோது அது பிரச்சினையாக மாற்றம் அடைய ஆரம்பித்தது.



**“என்னதான் நாகரிகம் பரவலாக விநியோகிக்கப்பட்டு பலராலும் பார்க்கப்பட்டாலும் சிலரே அதனை ஏற்றுக்கொள்கின்றனர். இது உலகமயமாக்கலில் உள்ள அறிவின்மை ஆகும். உலகமயமாக்கல் அவர்களின் அடையாளத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக கருதுவதாலும் நம்புவதாலும் கலாசாரப்பண்பாடு அழிவடைகின்றதா அல்லது மேம்பாடு அடைகிறதா என்பது விவாதத்திற்கும் கேள்விக்கும் உரிய விடயமாகக் காணப்படுகின்றது.”**

இது ஒருவரையொருவர் தங்கிவாழும் நிலையில் பேதத்தை ஏற்படுத்துகின்றது. என்னதான் பலர் பல்கலாசாரப் பண்பாட்டை விரும்பினாலும், சிலர் தங்களுடையது தான் மேன்மையானது சிறப்பானது என தான்தோற்றித்தனமாகச் செயற்படுகின்றனர். மேலும் பல்கலாசாரம் மாறி அனைவரும் ஒரே கலாசாரத்தை பின்பற்றினால் அவர்களுடைய பண்பாடுகள் அழிந்து அவர்களின் அடையாளம் அழியும் என மக்கள் அச்சப்படுகின்றனர். இதன் பின்னால் அரசியல் மற்றும் பொருளாதார சூழ்ச்சிகளும் செயற்படுகின்றன.

உதாரணம்: ஜல்லிக்கட்டு.

என்னதான் நாகரிகம் பரவலாக விநியோகிக்கப்பட்டு பலராலும் பார்க்கப்பட்டாலும் சிலரே அதனை ஏற்றுக்கொள்கின்றனர். இது உலகமயமாக்கலில் உள்ள அறிவின்மை ஆகும்.



உலகமயமாக்கல் அவர்களின் அடையாளத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக கருதுவதாலும் நம்புவதாலும் கலாசாரப்பண்பாடு அழிவடைகின்றதா அல்லது மேம்பாடு அடைகிறதா என்பது விவாதத்திற்கும் கேள்விக்கும் உரிய விடயமாகக் காணப்படுகின்றது.

எண்ணம் போல் வாழ்வு எண்ணம் நன்மையானதாக அமையும் போது மக்களின் வாழ்வான பழக்கவழக்கமான கலாசாரப்பண்பாடானது மேன்மையடையும். அவ் எண்ணம் தீமையானதாக, சுயநலமாக அமையும் போது கலாசாரப்பண்பாடு அழிவடையும் இதனை அரிஸ்டோட்டில் அரசியலைக் கொண்டு கணித்துள்ளார். அரசுகள் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட இக் கலாசாரப் பண்பாடுகளும் ஒரு காரணமாக அமைகின்றன. இது ஒன்றிணையும் போது நாடுகளிடையேயான மோதல் கூட ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. பண மற்றும் பதவியதிகார ரீதியில் நாடுகள் அடிமையாகக் கூடும்.

ஆகவே உலகமயமாக்கல் காரணமாகக் கலாசாரப் பண்பாடானது நன்மை மற்றும் தீமை இவை இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. எனவே நான் கூறுகிறேன், உலகமயமாக்கல் காரணமாகக் கலாசாரப்பண்பாடு அழிவடையவும் இல்லை மேம்பாடடையவும் இல்லை. அது ஒரு நெகிழ்ச்சித்தன்மையுடையதாக மாற்றம் பெற்றுள்ளது.

‘பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டும் பவர்’.

# மரணத்தை அழைக்கழி முத்தமிட்ட கவிஞர் சுந்தர்!

## சமூக மாற்றத்துக்கான படைப்பாளி கி.பி.அரவிந்தன்



ஐங்கரன்

ஈழப் போராளியும் சமூக மாற்றத்துக்கான படைப்பாளியுமாக விளங்கிய கி.பி.அரவிந்தனின் 70 ஆவது - 1953 செப்டெம்பர் 17 -அகவை நாளையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

அரசியலை மானுட முகம் கொண்டதாக மாற்றிக்கொள்வதற்கு கவிதையை ஆயுதமாகத் தேர்வு செய்து கொண்டவர்தான் கி.பி. அரவிந்தன். அவரின் ‘ஓர் உறைபனிக் காலக் கட்டியக்காரன்‘ “Le messager de l‘hiver‘ [லே மெசேசர் டி எல் ஹிவர்]என்னும் கவிதை நூல் பிரஞ்சு மொழியில் ‘றிவநெவ்’ என்னும் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டு, பாரிஸ் நகரில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

### சமூக மாற்றத்துக்கான படைப்பாளி:


அரசியல் அனுபவத்தை இலக்கிய அனுபவமாக மாற்ற, சிலருக்கு மட்டுமே தெரிந்திருக்கிறது. இலத்தீன் அமெரிக்கப் பெருவெளியில், இவ்வாறான தனித்துவங்களைக் காண முடியும். அரசியல் செயல்பாடு, இலக்கியச் செயல்பாடாக மாறி, அரசியல் விடுதலைக்கான விதைகள் அங்கு உற்பத்தியாகின்றன. கி. பி. அரவிந்தன் 17 செப்டம்பர் 1953 இல் பிறந்தவர். 8 மார்ச் 2015 மரணிக்கும் வரை அவரின் எழுத்து வலிமையானதாக இருந்தது.

ஈழத்தின் குறிப்பிடத்தக்க புலம்பெயர் எழுத்தாளரும், கவிஞரும், மூத்த அரசியல் செயற்பாட்டாளருமான கி.பி. அரவிந்தனும் அர்ப்பணிப்புக்குப் பின்னர், அரசியல் கதவுகளைத் திறந்து, இலக்கியப் பெருவழியைச் சென்றடைந்து, விடுதலை முழங்கங்களைக் கடைசி நாள் வரை முழங்கி, தனித்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார்.

கி.பி.அரவிந்தனின் எழுத்துகள் ஈழத்தின் ஏக்கங்களையும் மண்ணின் மணத்தையும் இயல்பாகவே பெற்றுள்ளன. சமூக மாற்றத்துக்கான விடுதலையை நோக்கிய இவரது படைப்புகள், ஆழத்தையும் விரிவையும் உள்ளடக்கியவை. குறி தவறாமல் இலக்குகளை நோக்கிப் பாய்ந்து செல்லும் எழுத்தின் வீரியம் இவருக்கு வாய்த்திருக்கிறது.

இன்றைய காலத்தில் மறைந்துபோன ஈழத்துப் பழமொழிகள் பல இயல்பாகவே இவரது எழுத்தில் வந்துகொண்டேயிருக்கும்.

‘இனியொரு வைகறை’, ‘முகங்கொள்’, ‘கனவின் மீதி’ ஆகிய கவிதைத் தொகுப்புகள் இதில் மிகவும் புகழ் பெற்றவை. பல்வேறு காலப் பின்னணிகளைக் கொண்ட இவரது பேட்டிகள் ‘இருப்பும் விருப்பும்’ என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.




## மரணத்தை அடிக்கடி முத்தமிட்டவர்:


மார்க்சியத்தின் மீது தீராத ஈடுபாடு கொண்ட பல்கலைக்கழக மாணவப் பருவத்திலிருந்து, ஈழ விடுதலை நோக்கித் தனது பயணத்தை வேகப்படுத்திக் கொண்டார் அரவிந்தன். இதன் பின்னர் அமைந்த இவரது போராட்ட அரசியல் வாழ்க்கை, யாராலும் நினைத்துப் பார்க்க முடியாத அதிபயங்கரங்களைக் கொண்டிருந்தது. மரணத்துக்கு அருகில் அடிக்கடி சென்று திரும்பினார். சயனைட் அருந்தி முதலில் உயிர் தியாகம் செய்த, விடுதலைப் போராளி சிவகுமாரனுடன் தனது போராட்டப் பயணத்தைத் தொடங்கியவர்தான் அரவிந்தன்

கிறிஸ்தோபர் பிரான்சிஸ் என்னும் இயற்பெயரை கொண்ட எழுத்தாளரும் போராளியுமான கி.பி. அரவிந்தன்.இலங்கையின் வரலாற்றுப் புகழ் மிக்க நெடுந்தீவில் பிறந்த இவர், 62 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்திருக்கிறார்.




ஆனால், நூறாண்டுகள் வாழ்ந்திருந்தால்கூட பெற முடியாத அனுபவத்தை 62 ஆண்டுகளிலேயே இவர் பெற்றுவிட்டார். அவர் வாழ்ந்த அன்றைய நாட்களில் ஈழத்துச் சூழல், ரத்தத்தை சிந்த வைத்து, ஆழ்ந்த அனுபவத்தைக் கற்றுத்தந்திருக்கிறது.

இவர் பி.பி.சி. தமிழோசையின் பாரீஸ் நகர செய்தியாளராகப் பணியாற்றி வந்தார். அத்துடன் ஐரோப்பியத் தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொண்டுள்ளார். அப்பால் தமிழ் எனும் இணையத் தளத்தினை நடத்தி வந்தார். புதினப்பலகை இணையத்தளத்தின் முக்கிய பங்காளரும் ஆவார்.




## ஈரோஸ் விடுதலைப் போராளி:

1972 ஆம் ஆண்டில் 1972 அரசமைப்புச் சட்டம் தமிழருக்கு ஏற்றதல்ல என்ற துண்டறிக்கை விநியோகித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைதான மூன்று இளைஞர்களில் அரவிந்தனும் ஒருவர். 1976 ஆம் ஆண்டில் மீண்டும் கைதாகி டிசம்பரில் விடுதலையானார். இவர் தோழர் சுந்தர் என்றும் ஈரோஸ் இயக்கத்தின் விடுதலைப் போராளியாக அறியப்பட்டவர்.

1990களில் இலங்கையை விட்டு வெளியேறி, புலம்பெயர்ந்து பிரான்ஸில் வாழ்ந்து வந்தார். இவரது படைப்புகளில் ஈழவிடுதலைப் போராட்டமும், ஈழத்தமிழரின் புகலிட வாழ்வியலும் முனைப்புடன் காணப்படுகின்றன.

## பிரான்சிலிருந்து மௌனம் காலாண்டிதழ்:

இருபத்தைந்து ஆண்டுக் காலம் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்த அகதி வாழ்க்கை முறையில் இலக்கிய ஆளுமையாக, கலை ஆர்வலராக கி.பி.அரவிந்தன் உச்சம் பெற்றார். தாயகமான ஈழத்தின் நிகழ்வுகள் பற்றியும் மொழியால் ஒன்றுபட்ட தமிழக நிகழ்வுகள் பற்றியும் மிகுந்த அக்கறை செலுத்தி வந்தார்.

பிரான்சிலிருந்து மௌனம் எனும் காலாண்டிதழை கி.பி.அரவிந்தன் ஆசிரியராக இருந்து நடத்திவந்தார். ஓசை, சுவடு, ஈழமுரசு ஆகிய இதழ்களிலும் பங்களிப்புச் செய்துள்ளார். இனியொரு வைகறை, முகங்கொள், கனவின் மீதி மூன்று கவிதைத் தொகுப்புகள் தனித்தனியாக வெளிவந்துள்ளன. இம்மூன்று நூல்களும்



ஒருசேரத் தொகுக்கப்பட்டு 'மிச்சமென்ன சொல்லுங்கப்பா' எனும் பெயரில் 2015-ம் ஆண்டு வெளிவந்துள்ளது.

கி.பி.அரவிந்தனின் தன் வரலாறு, நேர்காணல்கள் கட்டுரைகள் அடங்கிய 'இருப்பும் விருப்பும்' எனும் நூலும் தற்போது வெளிவந்துள்ளது.

அரசியலை மானுட முகம் கொண்டதாக மாற்றிக்கொள்வதற்குக் கவிதையை ஆயுதமாகத் தேர்வு செய்து கொண்டவர்தான் அரவிந்தன்.

மானுடத்தை நேசித்த கி. பி. அரவிந்தன், உறைபனிக் கால கட்டியக்காரனின் மரணம் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு பாரிசில் உள்ள ஒரு மருத்துவமனையில் 2015 மார்ச் 8 அன்று காலமானார்.

# ஒரே ஒரு பாடும் நிலவாய்...



இசை உலகை உயிர்ப்பித்து..
உலகையே ஆள்வது பாலுவே
உன் குரல் தானோ...!!

உள்ளே பாலும் தேனும்
பாய்ச்சுவது உன் பாடல்
தரும் ஓர் சுகம் தானோ...!!

வசியம் செய்து - எம்மை
மசிய வைத்தது உன்
இசை தரும் இதம் தானோ...!!

இதயங்களை இதமாக்கி - எம்மை
இன்னலில் மீட்பது இளைய நிலா
உன் மொழி தானோ...!!

உன் பின்னே பல குரலை
ஏற்றிவைத்து ஏணியாக்கியது
உயர்ந்த உன் குணம் தானோ...!!

ஏக்கம் ஊட்டி எம்முள்ளே
துக்கம் தந்து மறைந்து
எனின்று தொலைந்தாயோ...!

நெஞ்சுக்குள் வலி தந்து
கண்ணுக்குள் மணியாகி உன்குரலில்
விண்ணால சென்றாயோ...!
சங்கீத ஜாதி முல்லை நீயாகி
கொஞ்சும் குரலாலே
நெஞ்சமெலாம் நிறைந்தாயோ...!!

மரங்கள் சாய்ந்தும்
கூடுகள் வீழ்ந்தும் இன்று
குயில்களையும் கதற செய்தாயோ...!

இரவு முடிந்தும்
பகல் அது தொடங்கியும்
எம்மை பரிதவிக்க விட்டாயோ..!

உன்னை மண்ணுக்குள்
மறைத்துவிடத்தான் மக்கள்
மனங்கள் ஏனோ மறுக்கிறதோ...!

மண்ணில் உந்தன் ராகம் இன்றி
எங்கள் இசை தாகம் தீருமோ...
இதயங்கள் அமைதி கொள்ளுமோ...!

உள்ளங்களை உலுக்கிப் போட்டு
உன் உயிர் மரணித்து பிரிந்தாலும்
குரலின் கொஞ்சல்களில் எங்கும்
ஒலித்துக்கொண்டே இருப்பாய்....!!
ஒரே ஒரு பாடும் நிலவாய்..!!

மாலினி
கொட்டகலை
(இலங்கை)




# நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சிறப்பு

முருகையா தவமணி தேவி (வட்ட கொட)



உலகம் முழுவதும் வாழ்கின்ற இந்துக்கள் அழகுத் தெய்வமான முருகனுக்கு பல்வேறு ஆலயங்களை அமைத்துள்ளனர். ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாணத்திலும் பல பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமான கோவில் நல்லூரில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவிலாகும். இக்கோவிலே யாழ்ப்பாணத்தினை 'கந்தபுராண கலாசாரம்' என்று சிறப்பித்துக் கூறுவதற்கு நிலைக் கலனாக விளங்குகிறது.

யாழ்நகரப் பகுதியிலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக ஏறக்குறைய 2km தூரத்தில் யாழ்ப்பாண நல்லூர் கந்தசுவாமிக் கோவில் அமைந்துள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயம் கட்டப்பட்ட வரலாறு பற்றி வரலாற்றாசிரியர்கள் வெவ்வேறு காலங்களை கூறினாலும், யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் நூலில் ஒன்றான 'கைலாயமாலை' யில் வரும் பாடலில் புவனேகபாகு மன்னனின் காலத்தில் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. தமிழ் வேந்தர் காலத்தின் திருக்கோவில் எனவும் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் போற்றப்படுகின்றது. இன்று முத்திரைச் சந்தி என்று சொல்லப்படுகின்ற இடத்தில் கத்தோலிக்க தேவாலயம் இருந்த இடத்தில் தான் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பிருந்தது.




1505ம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது ஈழத்து சிவாலயங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. மிகப்பெரிய கோவிலாகப் போற்றப்படும் நல்லூர் கந்தசுவாமி கோவிலும் முற்றாக அழிக்கப்பட்டது. கி.பி.948 ல் புவனேகப் பாகு மந்திரி நல்லைக் கோவிலை கட்டிய வனாக கைலாய மாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலப் பகுதிகளில் ஸ்ரீ செண்பகப் பெருமாள் என்பவரால் கட்டப்பட்டதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

நல்லூர் இலங்கையின் வட பகுதியின் இராசதானியாகவும் விளங்குகிறது. இந்த இராச்சியத்தை ஆட்சி செய்த முதலாவது மன்னன் கூழங்கைச் சக்கரவர்த்தி ஆவார். மதுரையில் இருந்து வந்த பாண்டிய மன்னனே கூழங்கைச் சக்கரவர்த்தி என்றும் யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி 1478 ல் கனக சூரிய சிங்கையாரின் மூத்தமகன் சிங்கை பரராசசேகரன் என்ற பெயரோடு அரசனானான்.செட்டிநாதர் கோவில், வீரகாளியம்மன், வீறு வந்த பிள்ளையார் கோவில் போன்றவற்றை நல்லூர்



கோவிலுக்கு சூழவும் அமைத்தான். நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையிலேயே ஏரி ஒன்றையும் அமைத்து அதற்கு யமுனா நதியின் தீர்த்தத்தை கொணர்வித்து 'யமுனாஏரி' என்ற பெயரையும் சூட்டினான். நல்லூரில் தமிழ்ச் சங்கம் நிறுவியதும் பரராஜசேகரனே.

கி.பி 1621இல் சங்கபோதியால் அமைக்கப்பட்ட கந்தசுவாமிக் கோவில் ஏறக்குறைய ஒன்றறை நூற்றாண்டுகளின் பின்னர் 'பிலிப் டி ஒலிவேறா்' என்ற போர்த்துக்கேயரினால் முற்றாக இடித்து அழித்தொழிக்கப்பட்டு, அவ்விடத்தில் இடிக்கப்பட்ட கோவிலின் கற்களைக் கொண்டு கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டது.

அக்காலத்தில் உடைக்கப்பட்ட கந்தசுவாமி கோயிலின் கற்களை மக்கள் தமது வீடுகளில் வைத்து நல்லூர் கந்தனாக நினைத்து வழிபட்டனர்.

கி.பி.1658ம் ஆண்டு யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் வசமானது. ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தில் மதரீதியான கடும் போக்கை குறைத்துக் கொண்டனர். இதன் காரணமாக கி.பி. 1734 ல் கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கப்பட முன்பு கந்தன்கோவில் அமைந்திருந்த அதே வளவில் கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணரால் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு வேல் ஒன்றினை வைத்து கந்தபுராணம் படிக்கப்பட்டு வந்தது.

இது 3வது தடவையாக அமைக்கப்பட்ட கோவிலாகும். இந்த காலத்தில் பறங்கியரால் அழிக்கப்பட்ட ஆலயத்தை மீளமைக்கவென நல்லூர் கந்தசுவாமி கோவிலின் அர்ச்சக சந்ததியினரான கிருஷ்ணையர் சுப்பையரும் விண்ணப்பித்த போது ஒல்லாந்த ஆட்சியாளர்கள் குருக்கள் வளவிலேயே ஆலயம் அமைக்க இணங்கினர்.

கி.பி. 1749ம் ஆண்டு முதலில் கந்தன் ஆலயம் அமைக்கப்பட்ட அதே வளவில் கிருஷ்ணையர் சுப்பையரினதும், யாழ் கச்சேரியில் முதலியராக இருந்த தொன்யுவான் மாப்பாணர் என்பவரினதும் முயற்சியால் 4வது தடவையாக கோவில் அமைக்கப்பட்டது. அன்று தொடக்கம் மாப்பாணர் முதலியார் குடும்பத்தினரே இக்கோவிலின் அறங்காவலர்களாக இருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலே தனிப்பட்ட அறங்காவலர்களை கொண்ட கோவிலாக நல்லூர் கந்தசுவாமி கோவில் விளங்குகிறது. தற்போது கோவில் அறங்காவலராக இருப்பவர் குமாரதாஸ் மாப்பாணர் முதலியாரும் இவருடைய மகன் ஷயன் மாப்பாணர் முதலியாருமே கோவிலை நிருவகிக்கின்றனர்.

மடாலயம் போன்று காட்சியளித்துக் கொண்டிருந்த இவ் ஆலயத்தை ஆகமம் சார்ந்த கிரியை முறைக்கும், சிற்ப சாஸ்திர விதிக்கமைய உள்ள கட்டிட முறைக்கும், மாற்றியமைத்து இன்றைய நிலைக்கு கொண்டு வர வித்திட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார்.அவரின் நினைவாக ஆலய வளாகத்தில் நாவலர் மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள கோவில்களில் நேரம் தவறாமல் நித்திய நைமித்திய பூஜைகளின் மூலம் நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றைய கோவில்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

நல்லூர்க் கந்தனை அலங்கார கந்தன் என்றும் வரலாறுகள் சிறப்பித்துக் கூறுகின்றன. நல்லூர் கந்தசுவாமிக் கோவிலின் மகோற்சவம் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையில் இருந்து 6ம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இலங்கையிலுள்ள பிரசித்திப் பெற்ற ஆலயங்களுள் நல்லூர் கந்தசுவாமி கோவில் முக்கியமானது. பல சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய இடமாகவும், பண்பாட்டு விழுமியங்களை கட்டிக் காக்கும் இடமாகவும், நல்லூர் கந்தன் கோவில் விளங்குகிறது.

திருவிழாக் காலங்களில் மட்டுமன்றி ஏனைய நாட்களிலும் ஏராளமான பக்தர்கள் வருகைத் தரும் ஆலயமாக நல்லூர் கந்தன் ஆலயம் விளங்குகிறது. திருவிழாக் காலங்களில் பக்தர்கள் கூட்டத்தினால் நல்லூர் பிரதேசம் நிறைந்துவிடும். நல்லூர் கந்தனின் திருவிழா நாட்களை யாழ்ப்பாணத்தில் வாழும் இந்துக்கள் அனைவரும் புனித நாட்களாக கருதுகின்றனர்.கடல்கடந்து வாழும் யாழ்ப்பாண மக்களும் நல்லூர் கந்தனின் திருவிழாவைக் காண வருகைத் தருகின்றனர்.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் மூலஸ்தானத்தில் முருகப்பெருமானின் வேல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மற்றைய ஆலயங்களில் முருகப் பெருமானின் சிலை விக்கிரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. நல்லூர் ஆலயத்தின் பற்றுச்சீட்டு இன்றுவரையிலும் ஒரு ரூபாவாகவே காணப்படுவது சிறப்பம்சம் ஆகும். வருடாவருடம் ஆலயத்தின் பகுதிகள் புனரமைக்கப்பட்டு வருவதோடு 2011ம் ஆண்டு தெற்குவாசலில் இராஜகோபுரம் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. வடக்கு வாசலிலும் வானளாவிய கோபுரம் அமைக்கப்பட்டுள்து

நல்லூர் ஆலயச் சூழலில் திருவிழாக்காலங்களில் ஒவ்வொரு நாளும் ஆலய நிகழ்வுகள், ஆன்மிக பிரசங்கங்கள், சொற்பொழிவுகள், நாட்டிய நடனங்கள், மற்றும் இசைக் கச்சேரிகள் என்பன நடைபெற்று வருகின்றன. அத்துடன் பஜனை படிக்கின்ற வழக்கமும் இவ்வாலயத்தில் நீண்ட காலமாக தொண்டு தொற்று நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நல்லூர் கந்தனை தரிசிக்க வரும் பக்தர்கள் ஒழுக்கத்தை கடைப்பிடிப்பவர்களாகவும், விளங்குகின்றனர். யாழ்ப்பாண மக்களின் தொன்மையையும் பெருமையையும் இன்றுவரை பேணி வரும் ஒரு திருவிழாவாக நல்லூர் கந்தனின் வருடாந்த மகோற்சவம் விளங்குகிறது.

நல்லூர் கந்தனின் தொன்மையையும், பெருமையையும் போற்றி பாதுகாத்திடும்வகையில் நாம் அனைவரும் நல்லூரான் சேவடிப் பணிவோம்.





# அறிவியலும் நம் முன்னோர்களும்

ஒரு என்ஜினியரிங் மாணவன் தன் தாத்தாவை பார்க்க கிராமத்திற்கு சென்றான். இவனோ ஐஐடியில் படித்து முடித்தவன். தாத்தா கிராமத்தில் கோவில்களுக்கு மரவேலை செய்தவர்.

கோவில்களுக்கு தேர், வாசல் கதவு போன்றவை இப்போது அதிகமாக தேவைப்படுவதில்லை. முன்பெல்லாம் இதுபோன்ற தச்சர்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் இருந்தது. கோவில் தேர் செய்வது என்பது ஒரு மிகப்பெரிய இன்ஜினியரிங்! அந்த தேர்களுக்கு முட்டு கொடுக்கும் ஆட்கள் முட்டு ஆட்கள் என்று அழைக்கப்பட்டு பின்னர் முட்டாள் என்ற சொல் வருவதற்கு காரணம் ஆகிவிட்டது!

பிற்காலத்தில் அவர்கள் செய்யும் வேலை தரம் குறைக்கப்பட்டு முட்டாள் என்பதை ஒரு அவச்சொல் ஆகிவிட்டது. காரணம் ஆங்கிலப் படிப்பு! கோவிலுக்கும் விஞ்ஞானத்துக்கும் சம்பந்தமில்லை என்று பாதிரிமார்கள் கிருத்துவ பள்ளிகளில் பாடம்எடுத்தார்கள்.

சுதந்திரம் வந்த பிறகு கிருத்துவ பள்ளிகளே அதிகமாக இருந்ததால் அங்கு பாடம் பயின்ற எல்லோரும் பண்டைக்காலம் மற்றும் கோவில்கள் போன்றவை இன்ஜினியரிங் ஒரு விஞ்ஞானம். அதற்கும் சமயத்திற்கும் சம்பந்தம் இல்லை, சமய வழிபாட்டு தலம் என்பது மூடநம்பிக்கை, அறிவியல் இல்லை என்று போதித்தார்கள். அதன் விளைவு, நிஜமாகவே பல முட்டாள்கள் அவர்கள் பாஷையில் தமிழ்நாட்டில் உருவானார்கள்.

இப்பொழுது நாம் மீண்டும் கோவில் தேருக்கு வருவோம். திடீரென்று பல ஆண்டுகள் கழித்து அந்த ஊர் கோவிலுக்கு தேரோட்டம் நடக்கப்போகிறது. நவீனகால ஆட்டோமொபைல் இஞ்சினியர் கோவில் தேர் அல்லது சப்பரம் போன்றவற்றை எள்ளி நகை ஆடுவார்.

இதில் இந்தக் கோவில் தேர் சக்கரம் பற்றிதான் நான் இப்போது கூறப் போகிறேன். இதன் பின்னால் ஒரு மிகப்பெரிய கணித மற்றும் அறிவியல் ஞானம் இருக்கிறது. ஆனால் காலப்போக்கில் அது மறைக்கப்பட்டுவிட்டது.

அந்த ஊர் பெரிய மனிதர் அந்த தாத்தாவிடம் கோவில் தேர் செய்ய கேட்டுக்கொள்கிறார். பக்கத்தில் நம் இன்ஜினியரிங் மாணவன் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். ஒரு சர்க்குலர் மூவிங் வீல் என்பது பல இன்ஜினியரிங் சம்பந்தப்பட்டது, நம் தாத்தா இதை எப்படி செய்கிறார் என்று பார்ப்போம். முதலில் இதற்கு குவாண்டிடி எடுப்பதே கஷ்டம். என்ன செய்யப் போகிறார் என்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான் நம் படித்த இன்ஜினியரிங் மாணவன்.

தாத்தா மரம் எடுக்க ஆட்களை கூப்பிட்டார். ‘‘போய் ஏழடி சக்கரம் செய்ய 22 அடி கயிறு எடுத்து வா.. மரம் வாங்க வேண்டும். அந்த மரம் ஏழு அடி சக்கரத்துக்கு சரியாக இருக்கும்’’ என்று சொல்லி அனுப்பினார். மாணவனுக்கு ஒரே ஷாக்! ஒரு வட்டத்தின் விட்டம் 22 க்கு 7 என்பது சரியான கணக்கு. ‘‘தாத்தா எப்படி உங்களுக்கு இந்த கணக்கு தெரியும்?’’ என்று கேட்டான். தாத்தா சர்வசாதாரணமாக ‘‘தேர்ச்சக்கரம் செய்ய பல கணக்குகள் உண்டு. வழிவழியாக பாட்டன், முப்பாட்டன் சொன்னது. அதில் ஒரு கணக்கு’’ தான் இந்த சக்கர கணக்கு என்று கூறினார்.

மாணவன் தாத்தா காலில் விழுந்தான்.

‘‘மன்னித்துக் கொள்ளுங்கள்...தாத்தா..!!’’ ஒரு வட்ட சக்கரம் செய்வதற்கு பல இன்ஜினியரிங் அறிவியல் கணக்குகள் நாங்கள்





போடுவோம்... ஆனால் எல்லா வட்டங்களுக்கு கணித அடிப்படை ‘பை’ என்னும் ஆங்கில கிரேக்க வார்த்தைதான். பிதாகரஸ் தியரம் அடிப்படை கொண்டு கணக்கிடப்படும்.

இந்த பித்தாகரஸ் தேற்றம் நம் இந்திய பிரம்மகுப்தர் முதலில் கண்டுபிடித்தார் என்று நான் படித்ததுண்டு ஆனால் அதற்கு நிரூபணம் இல்லை. ஆனால் ஆங்கில அறிவு கல்வி மற்றும் கணிதம் ஆகியவை பல்லாண்டு காலமாக அச்சுகளில் ஏற்றப்பட்டுள்ளது. அதனால் ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டதுதான் இந்த பை என்னும் கணித கோட்பாடு என்று அறிவியல் உலகம் சொல்கிறது.

ஆனால் அந்த பை மதிப்பு என்பது 22 கீழே 7. அதாவது 3.14 என்பதாகும். இந்தக் கண்டுபிடிப்புதான் அறிவியல் கணிதம் எல்லாவற்றுக்கும் அடிப்படை.

நீங்கள் இதை தெரிந்து வைத்திருக்கிறீர்கள் ஆனால் நீங்கள் இதை வாய்வழியாக செவி வழியாக அடுத்த சந்ததிக்கு எடுத்து செல்கிறீர்கள். மேற்கத்திய உலகம் டாகுமெண்ட் செய்து தனது கண்டுபிடிப்புகளை பேட்டன் செய்கிறது. விஞ்ஞான உலகம் அதைத்தான் ஏற்கிறது.

ஆனால், உங்கள் கணிதத்தால் விஞ்ஞானத்தால் பல்லாண்டு காலம் மிகச்சரியாக நிலைத்து நிற்கிற தஞ்சாவூர் கோபுரம் 120 அடி உயரம் கட்டி இருக்கிறீர்கள்! ஐரோப்பாவில் விஞ்ஞானத்தை வைத்துக்கொண்டு கட்டப்பட்ட சாய்ந்த பைசா கோபுரம் உலக அதிசயம் என்று சொல்கிறார்கள்..

அந்த மாணவன் ஒத்துக்கொண்டான் இன்றைய விஞ்ஞானம் தமிழனின் அறிவுக்கு முன்னால் கால் தூசு......எமது மூதாதையரிடம் இருந்து நாம் கற்க வேண்டியது கடலளவு உள்ளதென்பதை அவன் புரிந்து கொண்டான்.



# சகிப்பு!

**முல்லை பாஸ்கர்**

மருத்துவன்
சகித்து இருப்பதால்தான்
உயிர்கள்
உடலுடன்
உறவாடுகின்றன!

பெண்
சகித்து இருப்பதால்தான்
தாயாகிறாள்.
காந்தி
சகித்திருந்ததால் தான்
சுதந்திரம்
சுபம் செய்தது.

சகிப்புத்தன்மை
இருந்திருந்தால்?
சாதிச் சண்டை
சாக்கடைக்குள்
சென்று இருக்கும்.

கண்ணகி
சகித்து இருந்தால்..?
மதுரை மாய்ந்திடாமல்
இருந்திருக்கும்.

தெரசாவின்
சகிப்பால்
தேசம்
அன்னையாய்
ஆதரிக்கிறது.

ஆனால்.!
இரும்பொறை
அன்று சகித்திருந்தால்.
வரலாறு
அவன் புகழ் பாடி
இருக்காது.

சித்தார்த்தர்
சகித்து இருந்தால்
அன்று
புத்தர்
உருவாகி இருக்க
முடியாது.

உலக அமைதிக்கு
சகிப்புத்தன்மை தேவை
தான்.
ஆனால்..
சகிப்புத்தன்மை
என்று குனிந்து குனிந்து
கூனர்கள்
ஆகி விடாதீர்கள்.
நிமிர்ந்து நிற்போம்.

ஐங்கரன் விக்னேஸ்வரா




# ஹொங்காங்கின் புதிய தேசிய பாதுகாப்புச் சட்டம்

## ஹாங்காங் : 'ஒரு தேசம் ஈராட்சி முறை' , சீனாவின் புதிய பாதுகாப்புச் சட்டம்.

ஹாங்காங்கில் 2020 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புச் சட்டத்தினால், ஒரு தேசம் ஈராட்சி முறைமை யானது சீனாவால் சிதைக்கப்படுவதாக சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும், சனநாயக நாடுகளும் கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

ஹாங்காங்கில் (Hong Kong) சீன அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் (National security law & NSL) பாரிய விளைவு தற்போது சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும், சமூக செயற்பாட்டாளர்களும், ஜனநாயகக் கோரிக்கையாளர்களும் கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். இந்த தேசிய பாதுகாப்புச் சட்டமானது, சீன அரசின் அடாவடி சர்வாதிகார ஆட்சியை ஹாங்காங்கில் அமுல் படுத்துவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.




ஹாங்காங்கில் 2020இல் சீன அரசாங்கம் கொண்டு வந்த புதிய தேசிய பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக அக்காலத்தில் ஹாங்காங்கில் தொடர்ச்சியான போராட்டங்கள் நடைபெற்று வந்தன. இந்தப் போராட்டங்களை ஹாங்காங் – சீன அரசுகள் கடுமையாக அடக்கி ஒடுக்கி வந்தன.

### ஹாங்காங் புதிய தேசிய பாதுகாப்புச் சட்டம்:

2020 ஜூன் 30 முதல் ஹாங்காங் சிறப்பு ஆட்சிப் பகுதியில் தேசியப் பாதுகாப்பிற்கான மக்கள் சீனக் குடியரசின் சட்டம் என்று தலைப் பிடப்பட்ட புதிய தேசிய பாதுகாப்புச் சட்டம் அமலுக்கு வருவதாக, ஹாங்காங்கின் தலைமைச் செயலரான கேரி லாம் அறிவித்தார்.

சட்டப்படி ஹாங்காங் சீனாவின் ஒரு பகுதியாகும். ஆனால் ஹாங்காங்கிற்கு என தனியான அடிப்படை அரசியல் சட்டமும், நீதித்துறையும், தன்னாட்சி கொண்ட நிர்வாக அரசும் நீடிக்கும். பல கட்சி ஜனநாயகம், பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகியவை எல்லாம் ஹாங்காங்கில் உண்டு.

ஹாங்காங்கில் அமல்படுத்தப்பட்டுள்ள இந்த தேசிய பாதுகாப்புச் சட்டம் குறித்து மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும்,





சமூக செயற்பாட்டாளர்களும், ஜனநாயகக் கோரிக்கையாளர்களும் கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். தேசிய பாதுகாப்பு எனும் பெயரில் ஹாங்காங் மக்களின் அனைத்து ஜனநாயக உரிமைகளையும் பறிக்கும் விதமாக இந்தச் சட்டம் இருப்பதாகக் குறிப்பிட்டனர்.

## ஹாங்காங் - சீனா வரலாறு :

சீனாவின் மன்னராட்சியின் கீழ் இருந்த ஹாங்காங் தீவை 1842-ம் ஆண்டு நடந்த முதல் ஓப்பியம் போரில் பிரிட்டன் கைப்பற்றியது. அதன் பின்னர் 1898-ம் ஆண்டு சீனாவிடமிருந்து கூடுதல் நிலப்பரப்புகளையும் சேர்த்து 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்தது பிரிட்டிஷ் அரசு. பிரிட்டன் ஆட்சியில் ஹாங்காங் ஒரு பெரும் வர்த்தக நகராக உருவாகியது.

மாவோவின் தலைமையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1949-ம் ஆண்டு சீனாவில் புரட்சியைச் சாதித்து மக்கள் சீனக் குடியரசைக் கட்டியமைத்தது. ஆயினும் அப்போதும் ஹாங்காங் பிரிட்டிஷ் காலனியாகவே இருந்துவந்தது. பிரிட்டிஷ் காலனிய அரசை எதிர்த்து பல்வேறு



விடுதலைப் போராட்டங்கள் ஹாங்காங்கில் நடந்துள்ளன. அவை அத்தனையும் பிரிட்டிஷ் அரசால் ஒடுக்கப்பட்டது.

பின்னர் 1982-ம் ஆண்டு ஹங்காங்கை சீனாவிடம் ஒப்படைக்கக் கோரி சீன அரசு பிரிட்டிஷ் அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தியது.

1997 ஜூலை 1 முதல் ஹாங்காங்கில் 'ஒரு தேசம் ஈராட்சி முறை' (One Country Two Systems) அமலுக்கு வந்தது. இந்த ஐம்பதாண்டுகளும் சீனாவுக்கும் ஹாங்காங்கிற்கும் இருக்கும் உறவு – 'ஒரே நாடு, இரண்டு அமைப்பு முறை' என்பதாகும். பிரிட்டனின் காலனியாக இருந்த ஹாங்காங், சீனாவின் காலனியாக இதன் பின்னர் தாரைவார்க்கப்பட்டது.

அதாவது சட்டப்படி ஹாங்காங் சீனாவின் ஒரு பகுதியாகும். ஆனால் ஹாங்காங்கிற்கு என தனியான அடிப்படை அரசியல் சட்டமும், நீதித்துறையும், தன்னாட்சி கொண்ட நிர்வாக அரசும் நீடிக்கும். பல கட்சி ஜனநாயகம், பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகியவை எல்லாம் ஹாங்காங்கில் உண்டு.

ஐம்பதாண்டு ஒப்பந்தம் முடிந்த பிறகு ஹாங்காங் அரசு எப்படி இயங்கவேண்டும் என்பதை சீனா முடிவு செய்யும். இதுதான் இந்த ஒப்பந்தததின் சாரம். தாய்நாட்டோடு இணைகிற பெருமிதம் சிலருக்கு இருந்தது. என்றாலும், சீனாவின் ஆளுகையில் ஹாங்காங்கின் சுதந்திரக் காற்றுக்குப் பங்கம் நேருமோ என்கிற அச்சம் பலருக்கு இருந்தது. ஹாங்காங்கின் சுயாட்சியில் பெய்ஜிங் பெருமளவில் தலையிடவில்லை. முதல் ஐந்து ஆண்டுகளின் முடிவில் அப்படியான அச்சத்திற்கு அவசியமில்லை என்கிற முடிவுக்குப் பலரும் வந்தனர்.

## ஹாங்காங் அரசியல் கட்சிகள்:

பெய்ஜிங்கில் 2008ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகள் சர்வதேச அரங்கில் சீனாவின் மதிப்பை உயர்த்தியது. அதற்கான ஒலிம்பிக் பந்தம் உலகின் பல நகரங்கள் வழியாக பெய்ஜிங்கை அடைந்தது.

சீன மண்ணில் பந்தயத்தின் தொடர் ஓட்டம் துவங்கிய இடம் ஹாங்காங். மக்கள் பெருமகிழ்வுடன் அந்த நிகழ்வில் பங்கேற்றனர். ஒரு தேசியப் பெருமிதம் மக்கள் மத்தியில் நிலவிய காலமது.

அப்போது ஹாங்காங் சீனாவோடு நெருங்கிவருவது போல் தோன்றியது. தங்கள் தாய் மண்ணை ஹாங்காங் சீனர்கள் மீண்டும் கண்டுகொண்டதாக பெய்ஜிங் ஊடகங்கள் எழுதின.இந்தக் காலகட்டத்தில் சட்டமன்றமும் அரசியல் கட்சிகளும் அவற்றுக்கு விதிக்கப்பட்ட வரையறைகளுக்குள் அமைந்தன.

> ஹாங்காங் சீனாவோடு நெருங்கிவருவது போல் தோன்றியது. தங்கள் தாய் மண்ணை ஹாங்காங் சீனர்கள் மீண்டும் கண்டுகொண்டதாக பெய்ஜிங் ஊடகங்கள் எழுதின.இந்தக் காலகட்டத்தில் சட்டமன்றமும் அரசியல் கட்சிகளும் அவற்றுக்கு விதிக்கப்பட்ட வரையறைகளுக்குள் அமைந்தன

ஹாங்காங் அரசியல் கட்சிகளின் வரலாறு எண்பதுகளில்தான் துவங்கியது. ஹாங்காங் அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்கள், பெய்ஜிங் ஆதரவுக் கட்சிகள் என்றும் ஜனநாயக ஆதரவுக் கட்சிகள் என்றும் வகைப்படுத்தப்படும்.

1991இல் பிரிட்டிஷ் அரசு நடத்திய முதல் தேர்தலில் வெற்றிபெற்ற ஜனநாயக ஆதரவாளர்களால் 1994இல் துவங்கப்பட்டதுதான் ஜனநாயகக் கட்சி. அதற்கு முன்பாகவே 1992இல் பெய்ஜிங் ஆதரவாளர்களால் துவங்கப்பட்டது 'டெமாக்ரடிக் அலையன்ஸ் ஃபார் பெட்டர்மென்ட் ஆஃப் ஹாங்காங் – டி.ஏ.பி' (Democratic Alliance For Betterment of Hong Kong& DAB). இன்னும் பல ஜனநாயக ஆதரவு பெய்ஜிங் ஆதரவுக் கட்சிகள் அரசியல் அரங்கில் உள்ளன.

## சீனா மீது பொருளாதாரத் தடை:

சீன சார்பு ஹாங்காங் அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஹாங்காங் மீதோ, சீனா மீது பொருளாதாரத் தடை விதிக்க வெளிநாடுகளுக்கு கோரிக்கை விடுப்பதோ, ஹாங்காங் சட்டத்திற்கும் கொள்கைகளுக்கும் இடையூறு ஏற்படுத்த அந்நிய நாடுகள்,






நிறுவனங்கள், அல்லது அமைப்புகளிடமிருந்து உத்தரவுகள் பெற்று செயல்படுவது உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்தப் புதிய சட்டத்தில் உள்ள அந்நிய நாடுகளுடன் கூட்டுச் சதி என்ற பிரிவின் கீழ் கைது செய்ய முடியும்.

சீனாவின் எந்த ஒரு பகுதியின் ராஜ்ஜிய நிலைமைகளை மாற்றுவது குறித்து அல்லது எந்தப் பகுதியையும் பிரிப்பது குறித்து திட்டமிடுவதும், அதற்கு ஏற்பாடு செய்வதும், அத்தகைய செயல்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும், அதற்கு உதவுவதும், அத்தகைய செயல்களைத் தூண்டுவதும் கடுமையான பிரிவினைவாதக் குற்றமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இதன்படி ஹாங்காங் சுய நிர்ணய உரிமை குறித்தோ அல்லது திபெத்தின் விடுதலை குறித்தோ யாரேனும் இனி சாதாரணமாகப் பேசினாலும்கூட தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரிவினைவாதத்தை தூண்டிய குற்றத்திற்காகக் கைது செய்ய முடியும்.

## சீனாவுக்கு நாடு கடத்தல் :

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்கப்படாது. இதன் காரணமாக, அரசியல் கைதிகள் சீனாவுக்கு நாடு கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதற்கும் கடும் தண்டனைகள் விதிக்கப்படுவதற்கும் வாய்ப்புண்டு.

குறிப்பாக, ஹாங்காங் மீதான சீனாவின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வரும் அரசியல் எதிரிகளை துரிதமாக முடக்குவதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.இந்தச் சட்டத்தின் பிரிவு 55, சீன அரசின் தேசிய பாதுகாப்பு அலுவலகம் ஒன்று ஹாங்காங்கில் அமைக்கப்படும் என்று தெரிவிக்கிறது. அங்கு, தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் கமிட்டி ஹாங்காங்-கின் தலைமைச் செயலரின் தலைமையில் அமைக்கப்படும்.

அவ்வாறு அமைக்கப்படும் கமிட்டியும் அதன் கீழ் செயல்படும் குழுவினரும், ஹாங்காங் நீதிமன்றம் மற்றும் போலீசின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருப்பர். அதாவது, இந்த பிரிவு அலுவலர்களும், அதிகாரிகளும் போராட்டக்காரர்களின் மீதோ, மக்களின் மீதோ மனித உரிமை மீறலில் ஈடுபட்டாலோ, கொலை, கடத்தல் உள்ளிட்ட பாதகங்களைச் செய்தாலோ ஹாங்காங் சட்டத்தின் கீழ் அவர்களை கைது செய்யவோ தண்டிக்கவோ முடியாது.

## ஹாங்காங் போராட்டங்களின் வரலாறு :

ஹாங்காங்கில் கொண்டுவரப்பட்டுள்ள தேசியப் பாதுகாப்புச் சட்டம், ஜனநாயக விரோதமாகவும் ஹாங்காங் நகரத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு ஜனநாயக உரிமைகளை மறைமுகமாக ரத்து செய்யக் கூடியதாகவும் இருக்கும் காரணத்தினாலேயே ஹாங்காங் மக்கள் இச்சட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் போராடி வந்தனர்.

சீனாவில் கைதிகள் முறையாக விசாரிக்கப்பட மாட்டார்கள் என ஹாங்காங் ஜனநாயக ஆதரவாளர்கள் அஞ்சினார்கள். பிற்காலத்தில் எதிர்க்குரல்களை அடக்க இந்த மசோதா பயன்படலாம் என்கிற அச்சமும் சேர்ந்தது. 2020 ஜூன் 9 அன்றும் 16 அன்றும் ஹாங்காங் வீதிகளில் லட்சக்கணக்கானோர் அணிவகுத்தனர். முந்தையது வெண்சட்டைப் பேரணி. பின்னது கருஞ்சட்டைப் பேரணி. கடந்த 2019-ம் ஆண்டு, முக்கிய வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டவர்களை ஹாங்காங் நகரிலிருந்து சீனாவுக்கு நாடு கடத்துவதற்கான சட்டத் திருத்த மசோதா ஒன்றை ஹாங்காங் அரசாங்கம் கொண்டுவந்தது. அதற்கு எதிராக அந்த ஆண்டில் ஜூலை 1, அன்று ஹாங்காங் சீனாவோடு இணைந்த தினத்துக்கான பேரணியிலிருந்தே போராட்டங்கள் துவங்கின.

கடுமையான ஒடுக்குமுறையை போலீசு மூலம் கட்டவிழ்த்துவிட்டது ஹாங்காங் அரசு. எனினும் விடாப்பிடியாக இந்த ஆட்கடத்தி சட்டத்திற்கு எதிராக ஹாங்காங் மக்கள் போராடினர்.

## ஹாங்காங் சுய நிர்ணய உரிமை:

புதிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால், பெருமளவிலான தண்டத்தொகையும், பத்தாண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை சிறைத்தண்டனையும் கூட கொடுக்க முடியும். மேலும் ஹாங்காங்கில் கைது செய்யப்பட்ட நபரை விசாரணைக்காக என்று கூறி சீனாவுக்கு நாடு கடத்தவும் முடியும்.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முறையும் முழுக்க முழுக்க ஜனநாயக விரோதமானதாகவும், ஹாங்காங்கின் தனிப்பட்ட அடிப்படை சட்டங்களுக்கு முரணாகவும் இருக்கிறது.தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களை விசாரிப்பதற்காக ஹாங்காங் நீதிமன்றங்களில்



தனிப் பிரிவுகள் அமைக்கப்படும் என்றும் இத்தகைய வழக்குகளை விசாரிக்கும் நீதிபதியை நியமிக்கும் அதிகாரம் ஹாங்காங் நகரத்தின் தலைமைச் செயலருக்கு மட்டுமே உண்டு என்றும் இந்தச் சட்டம் குறிப்பிடுகிறது.

ஒருவேளை குறிப்பான ஒரு வழக்கு மிகவும் ‘இரகசியம்’ வாய்ந்தது என தலைமைச் செயலர் முடிவு செய்தால், அந்த வழக்கு விசாரணை வெளிப்படையான நீதிமன்றத்தில் நடத்தப்படாமல், மூடிய அறைக்குள் நடத்த உத்தரவிடும் அதிகாரமும் அவருக்கு உண்டு. மிகவும் முக்கிய வழக்குகளை சீனாவில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றும் அதிகாரமும் தலைமைச் செயலருக்கு உண்டு.





# குலதெய்வ வழிபாடு

நம்முடைய முன்னோர்களின் ஒவ்வொரு செயலிலும்கண்டிப்பாக ஒரு அறிவியலோ அல்லது சூட்சுமமோசமுதாயத்திற்கு ஒரு நல்ல கருத்தோ இல்லாமல் இருக்காது.

அப்படி, இன்று வரை தங்கமுலாம் பூசப்படாமல், தகதகவென அலங்காரமில்லாமல், கோபுரங்களில் கட்டிக்காக்காமல், கருவறைகளில் இடம்கேட்காமல், இதிகாசங்களில் எழுதிவைக்காமல், நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு ஒன்றிப்போய், குலம் காத்து, ஆன்மீகத்தையும் அறிவியலையும் தத்ரூபமாய் வெளிப்படுத்தும் பழைமையின் அடையாளம் குலதெய்வ வழிபாடுகள் பற்றிய ஒரு பார்வை இது.



பிருந்தா
ராஜகோபாலன்

‘நாள் செய்யாததை கோள் செய்யும் கோள் செய்யாததையும் குலதெய்வம் செய்யும்’ என்பார்கள். குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறக்ககூடாது என்பார்கள். சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை குலதெய்வத்திற்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை என்பார்கள். எமன்கூட ஒருவரின் குலதெய்வத்தின் அனுமதி பெற்றுத்தான் உயிரை எடுக்க முடியும் என்பார்கள். வாழ்வதற்கு காற்று எப்படி முக்கியமோ அது போல குலம் தழைக்க குல தெய்வம் முக்கியம் என்பது எனது கருத்து.

குலதெய்வ வழிபாடானது இன்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் வாழ்வோடு ஒன்றிப்போய் விட்டது. சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த நம் மூத்தகுடிகள் நடுகல் வழிபாட்டின் வழியில் கல்திட்டை அமைத்தும், பள்ளிப்படைகள் அமைத்தும் குலதெய்வ வழிபாட்டிற்கு அத்திவாரமிட்டு வழிபட ஆரம்பித்தார்கள். மதுரை வீரனும்,கருப்பண்ண சாமியும், ஐயனாரும் காவல் தெய்வங்களானது அப்படித்தான்.

‘சிறுதெய்வம் சேரோம் அல்லோம்’ என்ற அப்பரின் தேவாரமும்,‘இருசிறு பெரு தெய்வமும் உடன் நின்றா’ என்ற புறநானுற்றுப் பாடலும் சிலப்பதிகாரத்தில் இருந்த கண்ணகி வழிபாட்டு முறையும் இன்றைய சமூகத்தினருக்கு குலதெய்வங்கள் பற்றி எடுத்தியம்பும் வரலாற்று மூலாதாரங்கள் ஆகும். இது தமிழறிஞர் வேதாச்சலம் அவர்களின் ஆய்வு முடிவு.

மானுடவியல் ஆய்வாளர்களும் குலதெய்வங்கள் பற்றிப் பேசியுள்ளார்கள். குலதெய்வ வழிபாட்டு முறைக்கு ‘அனிமிசம்’ என்ற பெயரும் உண்டு. இதை இங்கிலாந்து மக்கள் ‘லுகுஸ்’ என்றும் ஜெர்மனியர்கள் ‘லக்ஸன்’ என்றும் அழைத்து குலதெய்வ வழிபாட்டின் தொன்மையை இன்றைய உலகத்தாருக்கு தெளிவாகக் கூறுகிறார்கள்.

நம் குலதெய்வங்களின் அனுகிரகம் இல்லையென்றால் நாம் என்னதான் யாகம் வளர்த்தாலும், ஆலயத்திற்கு சென்றாலும் எதிர்பார்த்த பலனை அடைய முடியாதுஎன்பது திண்மம். அதனால்தான் சொல்வார்கள் குலதெய்வ வழிபாட்டை மறப்பதென்பது தன் தாயைப் பட்டினி போடுவது போன்றது என்று. அவரவருக்கு இஷ்ட தெய்வங்கள் ஏராளம் இருக்கலாம். ஆனால் குல தெய்வத்திற்கு பிறகுதான் அவையெல்லாம். குலதெய்வத்தின் சக்தி இயற்கையோடு கலந்து நம்மை காப்பதாக நம் முன்னோர்கள் நம்பினார்கள். இந்த நம்பிக்கையின் விளைவே இன்று நாம் ஊர் திருவிழாவாக கொண்டாடும் குலதெய்வ வழிபாட்டு முறை.

கி.பி 17ம் நூற்றாண்டில் வேலுநாச்சியார் காலத்தில் நாட்டுக்காக உயிர்துறந்த வெட்டுயாளுக்கு நடுகல் வைத்து மாங்கல்யபூஜை செய்தமை, அவள் அன்றிலிருந்து வெட்டுடை காளியாக வணங்கப்பட்டமை, இதே போன்று கி.பி பதினான்காம் நூற்றாண்டின் ராஜகம்பள வம்சத்தாரின் காவலனாக இருந்து எதிரிகளால் தலைவேறு முண்டம் வேறாக வெட்டிக்கொல்லப்பட்ட மதுரை வீரனுக்கு நடுகல் வைத்தமை, விளைநிலங்களின் காவலனாக கறுப்புசாமியை நினைத்து காடுகள், மேடுகள், விளைநிலங்கள் என்று ஊரெல்லாம் கோயில் வைத்தமை, துன்பத்தால் தற்கொலைசெய்துகொண்ட பேச்சி, இசக்கி, நல்லதங்காள் போன்றோரின் ஆத்மாக்கள் பழி தீர்த்து விடும் என்ற அச்சத்தால் ஊர் எல்லைக்குள் கோயில் வைத்தமை போன்ற இன்னோரன்ன விடயங்கள் குலதெய்வத்தின் சிறப்புகளை பிரதிபலிக்கின்றன. இந்த பின்னணியில்தான் சுடலை





மாடன்,இசக்கி மாடன், புலமாடன்,வேம்பன், கறுப்புசாமி, மாடசாமி, மாயாண்டி, முனியாண்டி, முத்தையாசாமி, அண்ணன்மார்சாமி, அக்கினிவீரன்,ஒண்டிவீரன், மாயாண்டி, இருளப்பசாமி, இசக்கியம்மன், தீப்பாச்சம்மன், சக்கரை அம்மன், தனக்காளியம்மன், மாரியம்மன்,முனியம்மாள், இருளாயி, உச்சிமகாகாளி, காட்டேரி, முப்பிடாரி,வெள்ளயாயி அம்மன், ரோதமுனிபோன்ற சிறுதெய்வங்கள்பரவலாக இன்றளவும் பேசப்படுகின்றன.

நாட்டுபுற மக்களின் மத்தியில் இன்றளவும் வழிகாட்டியாக இருக்கும் இந்த குல தெய்வங்களுக்கு கோயில்களில் கருவறை கொடுக்காததிற்கும், மரத் தடிகளிலும் குடிசைகளிலும் பாதுகாப்பின்றிய வசதிகளற்ற நிலையில் இருப்பதற்கும் சாதியமுறை தோன்றியதுதான் காரணம் என்றும் சிலர் கருதுகிறார்கள்.

தமிழகத்தில் நடந்த ஒரு ஆய்வில் பெரு தெய்வ வழிபாட்டிற்கு சமமான முறையில் சிறுதெய்வ வழிபாடுகளும் உண்டு என்று சொல்கிறார்கள். இன்றும் கூட நல்ல மழை கிடைக்கவேண்டும், குடும்பம் செழிக்க வேண்டும், திருமணபாக்கியம் கிடைக்க வேண்டும், கர்ப்பிணிகள் சுகப்பிரசவம் பெறவேண்டும், தனக்கு எதிரிகளே இருக்கக்கூடாது என்றெல்லாம் குலதெய்வத்திற்கு நேர்த்தி வைத்து வழிபடுகிறோம். ஆனால் பெரு தெய்வங்களுக்கு கொடுக்கப்படுகிற முக்கியத்துவம் சிறுதெய்வ வழிபாட்டுக்குக் கொடுப்பதில்லை.

இந்த சிறு தெய்வ வழிபாட்டிற்கு பின்பு மிகப்பெரிய புராணகதைகளோ இதிகாச கதைகளோ இல்லை. இவர்கள் எல்லாம் நம்மோடு வாழ்ந்து மறைந்த மனிதர்கள். நம்முடைய முன்னோர்கள். பெருதெய்வங்கள் என்று சொல்லப்படும் சிவன் விஸ்ணு பார்வதி போன்ற தெய்வங்கள் எல்லாம் இதிகாசங்களாலும் புராணங்களாலும் எழுதப்பட்ட தெய்வங்கள். இந்த பெரு தெய்வங்களின் காவல் தெய்வங்கள்தான் சிறுதெய்வங்கள் என்று சிலர் கூறுவதும் உண்டு. முருகனுக்கு கடம்பனும் அம்மனுக்கு காத்தவராயன் பெரியாயி, முனிஸ்வரர் மற்றும் பிச்சாண்டியும் காவல் தெய்வங்கள் என்று சொல்கிறார்கள்.

தமிழர்களின் பொற்காலம் சோழர் காலம் என்றாலும் கூட, குலதெய்வ வழிபாடு அழிந்துபோன காலம் அக்காலம் தான். சமஸ்கிருத மொழிப் பயன்பாடு, பார்ப்பனர்களின் வருகை போன்ற காரணிகளால் குலதெய்வ வழிபாடு கொஞ்சம் கொஞ்சமாக நலிவடையத் தொடங்கியது. இந்தக் காலத்தில் மிகப் பிரமாண்டமான பெரு தெய்வ கோயில்கள் தமிழகத்தில்கட்டியாண்டன.

உலகம் முழுவதுமே குலதெய்வ வழிபாட்டின் செல்வாக்கு இருந்தது போல நம் நாட்டிலும் குலதெய்வ வழிபாடுகள் ஆரம்ப காலத்தில் இருந்தே இருந்துள்ளன என்று தொல்லியல் ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையின் வடபகுதி மக்கள் நாக வழிபாட்டை குலமரபாகக் கொண்டிருந்தார்கள் என்றும் நாகபாம்பை குலதெய்வமாக வழிபட்டிருக்கிறார்கள் என்றும்இந்த வழிபாட்டு முறை தெற்காசியாவில் தொன்மையான வழிபாட்டுமுறையில் ஒன்று என்றும் நாகபடுவான் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வு முடிவுகள் சொல்கின்றன.

இந்த இடத்தில் சுடுமண்ணிலான நாகசின்னங்கள், நாக வடிவிலான கற்கள் போன்றனவும்கண்டுபிடிக்கப்பட்டன. இன்னும் திருகோணமலை – அநுராதபுரம் பகுதிக்கு நடுப்பகுதியில் உள்ள நாகதீபம் என்ற இடம் ‘நாககாடு’ என்று அழைப்பட்டதற்கான ஆதாரங்களும் உண்டு. இதை வைத்து பார்க்கும் போது இலங்கையின் ஆதிக்குடிகளின் குலதெய்வம் நாகபாம்பு என்பது தெரிய வருகிறது.

இடம், தோற்றம், வாழ்க்கைநிலை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே குலதெய்வங்கள் அமைந்துவிடுகின்றன. இலங்கையில் சமய சடங்குகளை அடிப்படையாகக் கொண்டும் குல தெய்வ வழிபாடுகள் கணிக்கப்படுகின்றன. இதற்கு உதாரணமாக திரொளபதி அம்மன் வழிபாடு, கண்ணகி அம்மன் வழிபாடு, வைரவர் வழிபாடு, பேச்சியம்மன் வழிபாடு நாச்சிமார் வழிபாடு என்பனவற்றை குறிப்பிடலாம்.

இதில் திரெளபதி வழிபாடானது மட்டக்களப்பு பகுதியில் இன்றும் பிரசித்திபெற்ற ஒன்று. இந்த வழிபாட்டு முறையானது தென் தமிழகத்தில் இருந்து இலங்கைக்குகொண்டுவரப்பட்டது. பல்லவர் ரதக்கோயில் முறையிலும், நாயக்கர் காலத்தில் களியாட்டமுறையிலும் திரௌபதியம்மன் வழிபடப்பட்டாள் என்றும் சொல்லப்படுவதுண்டு.

> 1820 ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் மாரியம்மன் வழிபாடும் இலங்கையில் தோற்றம் பெறுகிறது. மாரியம்மன் சமுதாயத்தில் நடக்கும் தவறுகளுக்கு நீதிகேட்கும் தெய்வமாகவும், மழைவளம் தரும் தெய்வமாகவும், குழந்தைப் பேறு தரும் தெய்வமாகவும் வணங்கப்பட்டாள். மாரியை வேண்டினால் நல்லமழை பெய்யும் என்பார்கள். ஆக குளிர்த்தியான தெய்வம் மாரியம்மன். பொதுவாக, சிறுதெய்வ வழிபாட்டில் வீட்டுத் தெய்வங்கள், குலதெய்வங்கள், காவல் தெய்வங்கள், ஊர்த் தெய்வங்கள் என பிரிக்கப்படுகிறது. இதில் வீட்டுத் தெய்வம் தான் இந்த மாரியம்மன் வழிபாடு.





இலங்கையில் இராமாயணத்தினை அடிப்படையாக கொண்டு திரௌபதி அம்மனுக்கு திருவிழா கொண்டாடப் படுகிறது. குறிப்பிட்டுச் சொல்லப்போனால் ஆரையம்பதி திரௌபதி அம்மன் ஆலயம், புத்தூர் திரௌபதி அம்மன் ஆலயம், புளியந்தீவு திரௌபதி அம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களில் பூஜை வழிபாடுகள் பூசாரியினாலும், பழுகாமம் திரௌபதி அம்மன் ஆலயத்தின் பூஜைகள் நம்பியார் என்று சொல்லப்படக்கூடிய பூசாரியினாலும் நடைபெறுகிறது. இது சிறுதெய்வ வழிபாட்டு முறையில் உள்ளடக்கப்படும்.

இன்னும் இலங்கையில், வன்னிப்பகுதியில் பிரசித்திப்பெற்ற குல தெய்வ வழிபாட்டு முறைதான் கண்ணகியம்மன் வழிபாட்டு முறை.பொங்கல் வைத்து குளிர்த்திபாடி வழிபடுகிறார்கள் வடகிழக்கு மக்கள் அனைவரும்.

பௌத்தர்கள் கண்ணகியம்மனை பத்தினித் தெய்வமாக வழிபடுகிறார்கள். கண்டியை ஆட்சிசெய்த கஜபாகுமன்னனின் காலத்தில் இருந்து சிங்களவர்கள் மத்தியில் பிரபல்யமானது கண்ணகிவழிபாட்டுமுறை. இன்றும் கூட கண்டி எசல பெரகராவில் கண்ணகியம்மனுக்கு வழிபாடுகள் இடம்பெறுவது வழக்கம்.

கண்ணகி வானகம் சென்ற காட்சியை கண்ட வேடுவர்கள் அவளை குல தெய்வமாக வணங்கினார்கள் என்று ‘சிறு குடியீரே சிறு குடியீரே’ என்ற குற்றகுரவைப் பாடல் குறிப்பிடுவதாய் கூறப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் இமயத்தில் இருந்து கல்லெடுத்து கங்கையில் நீராட்டி கண்ணகிக்கு சிலைவைத்தான் என்றும் இந்த நிகழ்வுக்கு கஜபாகுவும் சென்றதாகவும்கூறப்படுவதும் உண்டு.

கண்ணகி வழிபாடு கூட தமிழ் நாட்டில் இருந்துதான் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரைக்கும் அறுபதுக்கு மேற்பட்ட கண்ணகியம்மன் ஆலயங்கள் உண்டு. வைகாசி மாதம் பிறந்து விட்டாலே பறையொலி முழங்க, குழல்நய ஓசையெழுப்ப வைகாசிப் பொங்கலை ஈழத்தவர் கொண்டாடுவது கண்ணகியை குலதெய்வமாக கொண்டும் சிறுதெய்வமாக பாவனை செய்தும்தான்.

இருந்தாலும் ஈழத்தில் ஆறுமுக நாவலரின் பிரசங்கங்களின் பின்னர் இது ஆகமமுறைக்கு கொண்டுசெல்லப் பட்டது. இலங்கையில் வைரவரையும் குலதெய்வமாக வழிபடுகின்றனர். சிவனின் மூர்த்தங்களில் ஒன்றென்று சொன்னாலும் கூட வடுகலை வைரவர், காலவைரவர், மகாவைரவர், ஞான வைரவர், உக்கிர வைரவர், நரசிம்ம வைரவர் போன்றோர் பெருதெய்வங்களின் காவல் தெய்வங்கள் என்று கூறும் வழக்கமும் இருக்கிறது.

தமிழர்கள் சொல்வார்கள் காசியின் காவல் தெய்வம் வைரவர் என்று. உண்மையில் ஒட்டு மொத்த தமிழரின் காவல் தெய்வமும் அவர்தான்.

அகோரமான தோற்றத்தோடு தீச்சுடர், கபாலம், உடுக்கு என்பனவற்றை திருகரங்களில் தாங்கியவாறு அச்சம் தரும் தோற்றம் தான் வைரவருடையது.

திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் வைரவரை குலதெய்வமாக வழிபடுவோர் அதிகமாக இருக்கிறார்கள். வைரவர் வழிபாட்டு முறை இலங்கையில் ஆரம்பத்தில் இருந்து இருப்பதாக போர்த்துக்கீச காலத்து வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. இலங்கையில் வைரவர் வழிபாடானது ஆகமம் சார்ந்தும் ஆகமம் சாராமலும் வழிபடப்படுகிறது. யாழ்ப்பாணம் கொக்குவில் தலையாழி ஸ்ரீ வைரவர் ஆலயம், யாழ்ப்பாணம் தெல்லிப்பளை வைரவர் கோயில், மற்றும் நூற்று ஐம்பது வருடம் பழமைகொண்ட கோணாவளை வைரவர் ஆலயம் போன்ற கோயில்களில் ஆகமவழிப்படி வைரவர் வழிபடப்படுகிறார்.

1820 ஆண்டுக்கு பிற்பட்ட காலப் பகுதியில் மாரியம்மன் வழிபாடும் இலங்கையில் தோற்றம் பெறுகிறது. மாரியம்மன் சமுதாயத்தில் நடக்கும் தவறுகளுக்கு நீதிகேட்கும் தெய்வமாகவும், மழைவளம் தரும் தெய்வமாகவும், குழந்தைப் பேறு தரும் தெய்வமாகவும் வணங்கப்பட்டாள். மாரியை வேண்டினால் நல்லமழை பெய்யும் என்பார்கள். ஆக குளிர்த்தியான தெய்வம் மாரியம்மன். பொதுவாக, சிறுதெய்வ வழிபாட்டில் வீட்டுத் தெய்வங்கள், குலதெய்வங்கள், காவல் தெய்வங்கள், ஊர்த் தெய்வங்கள் என பிரிக்கப்படுகிறது. இதில் வீட்டுத் தெய்வம் தான் இந்த மாரியம்மன் வழிபாடு.

இலங்கையின் மலையகப் பகுதியை பொறுத்த மட்டில் குலதெய்வங்களை விட காவல் தெய்வங்களே அதிகம் என்று சொல்லலாம். மலையேறும் மக்கள் ஒவ்வொரு ஊரிலும் காவல் தெய்வங்களை வழிபட்டார்கள். இதனால் விலங்குகளில் இருந்தும், இயற்கை சீற்றங்களில் இருந்தும் தம் உயிரை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று நம்பினார்கள். மாடசாமி, வெள்ளாயி, வண்ணாத்தியம்மன், அக்கினிகாளி போன்றோரின் நடுகல்லையும் மலைநாட்டவரின் ஊர்களில் காணலாம்.

இந்த சிறுதெய்வங்களுக்கு அளவுக்கடந்த சக்தியிருப்பதாக பிரபல அறிஞர் ராமநாதன் கூறுகிறார். பொதுவாக இறந்தவர்களின் ஆத்மாக்களுக்கு சக்தி அதிகம் என்று கருதப்பட்டதால் குலதெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும் தமிழரின் வாழ்வியலை அழகியலாக மாற்றிக்கொண்டிருக்கிறது. சிறுதெய்வங்கள் பற்றியும் குலதெய்வங்கள் பற்றியும்ஹென்றி ஓயிட்ஹெட் என்பவர் ஆய்வு செய்து புத்தகமாக வெளியிட்டார்.

இதில் சில இடங்களில் குலதெய்வங்களுக்கான நைவேத்தியங்கள் அசைவ முறையிலும், சில இடங்களில் சைவமுறையிலும் இருப்பதாக அதில் குறிப்பிடுகிறார். சிலர் பொங்கல் வைத்தும் சிலர் கருவாடு, சேவல், மது, பீடி, சுருட்டு போன்றன வற்றை வைத்தும் படையல் இடுகிறார்கள்.

குடும்ப உறவினர்கள் மத்தியில் பிளவு ஏற்படின் குலதெய்வத்திற்கு பூக்கட்டிப் போட்டு உறவை புதுபித்துக்கொள்ளும் வண்ணம் திருநீறு வாங்கி பூசிக்கொள்கிறார்கள். ஆகவே தமிழரின் வாழ்வியலை பிரதிபலிக்கும் கண்ணாடி சிறுதெய்வ வழிபாட்டின் குலதெய்வங்களை வழிபடும் முறை. கள்ளர்வீட்டு திருவிழாவும் இதனைத்தான் சிறப்பிக்கிறது.



ஆகவே சிறுதெய்வங்கள் தாழ்ந்தவை, பெருதெய்வங்கள் சிறந்தவை என்று நாம் வாதிடமுடியாது. பெரும் கோயில்களும் பேரரசுகளும் தோன்றியபோது சிறுதெய்வங்கள் வலிமைகுறைந்து குன்றிப்போனதாய் நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நாம் அனைவரும் சிறுதெய்வத்தினுடைய பிள்ளைகள். ஆகவே நாம் தான் நம்முன்னோர்களை வழிபடவேண்டும். நாம் குலதெய்வத்தை வழிபட்டால் நம் குலம் தழைக்கும். அவர்களின் வாழ்த்தும் ஆசியும் நம் வாழ்க்கையை மேம்படுத்தும். ஆகவே, அதன் தாத்பரியம் அறிந்து அடுத்த சந்ததியினருக்கும் இவ்வழிபாட்டு முறையினை எடுத்துச்செல்வோம்.



# நட்பு!

கார்கில் போரின் போது இரண்டு நண்பர்கள் களத்தில் இருந்து சுட்டுக் கொண்டிருந்தனர். எதிரிகள் சுற்றி வளைத்து சுடும்போது ஒருவன் மட்டும் குண்டடி பட்டு விழுந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்தான்.

‘நான் என் நண்பனை எப்படியாவது தூக்கி வந்து விடுகிறேன் எனக்கு உத்தரவு கொடுங்கள்’ என படைத் தளபதியிடம்கேட்டான்மற்றவன்.

‘மறைந்து இருந்து தாக்குவது தான் சரியான வழி, நீ அங்கு போவதால் உன் உயிருக்கும்தான் ஆபத்து’ என்றார் தளபதி.

மீண்டும் மீண்டும் கேட்க,‘நீ போவது என்றால் போ. ஆனால், நீ போவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை’ என்று தளபதி கைவிரித்தார்.

அதை மீறியும் தன் நண்பனை காப்பாற்ற ஓடினான் அவன்.



அவனை தோளில் தூக்கி கொண்டு வரும் போது எதிரிகள் சுட்டனர்.

இவனுக்கும் அடிபட்டது, அதையும் மீறி அவனைத் தூக்கி கொண்டு வந்தான்.

படைத் தளபதி அவனைப் பரிசோதித்து பார்த்தார். அவன் நண்பன் இறந்து போய் இருந்தான். ‘நான் அப்பொழுதே சொன்னேன். நீ அவனை காப்பாற்றப் போவதால் எந்த உபயோகமும் இல்லை. இப்போது பார் நீயும் அடிப்பட்டுக் கிடக்கிறாய்’ என்றார் தளபதி .

‘நான் அவனைக் காப்பாற்றப் போனது தான் சார் சரி’ என்றான் இவன்.‘என்ன சொல்கிறாய்? உன்நண்பன் இறந்து கிடந்தான். நீசொல்வது எப்படி சரியாகும்?’ என்று கேட்டார் தளபதி .

‘நான் அங்கு போகும்போது என் நண்பன் உயிருடன் தான் சார் இருந்தான்.

அவனை நான் தோளில் தூக்கி வரும்போது, என்னைக் காப்பாற்ற நீ வருவாய்என்று எனக்குத் தெரியும் நண்பா என்று சொல்லிவிட்டுத் தான் சார்இறந்தான்.

அந்த ஒரு வார்த்தை எனக்கு போதும் சார். இந்தக் காயம் எல்லாம் எனக்கு ஒரு பொருட்டே இல்லை’என்றான்.

ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்.



# ஈழத்துக் கவிஞர் மாவிட்டபுரம் க.சச்சிதானந்தன்

'சாவில் தமிழ்படித்துச் சாகவேண்டும் என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்.
பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழும் ஓசை கேட்கவேண்டும்
ஓடையிலே என்சாம்பல் ஓடும்போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்'

இந்த வரிகள் அனேகமானோருக்குத் தெரிந்திருக்கும்…

ஆனால் இந்த கவிவரிகள் வரும் கவிதையின்
முழுமையான கவியும், இதை எழுதியவர்
பெயரும் உங்களுக்கு தெரியுமா?

பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டியதில்லை
மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை அந்த
மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை.

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமேயடா
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா.

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை ஒரு
உற்றார் உறவினரும் வேண்டியதில்லை
மண்ணில் ஒரு பிடியும் வேண்டியதில்லை இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை.

பாட்டில் ஒருவரியைத் தின்றுகளிப்பேன் உயிர்
பாயும் இடங்களிலே தன்னை மறப்பேன்
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன் அங்கு
காயும் கிழங்குகளும் தின்று மகிழ்வேன்.

மாட மிதிலைநகர் வீதிவருவேன் இள
மாதர் குறுநகையில் காதலுறுவேன்
பாடி யவர் அணைக்கக் கூடி மகிழ்வேன் இளம்
பச்சைக் கிளிகளுடன் பேசிமகிழ்வேன்.

கங்கை நதிக்கரையில் மூழ்கியெழுவேன் பின்பு
காணும் மதுரைநகர்க் கோடி வருவேன்
சங்கப் புலவர்களைக் கண்டு மகிழ்வேன் அவர்
தம்மைத் தலைவணங்கி மீண்டு வருவேன்.

செம்பொற் சிலம்புடைத்த செய்தியறிந்து அங்குச்
சென்று கசிந்தமுது நொந்து விழுவேன்
அம்பொன் உலகமிர்து கண்டனேயடா என்ன
ஆனந்தம் ஆனந்தம் கண்டனேயடா.

கால்கள் குதித்துநட மாடுதேயடா கவிக்
கள்ளைக் குடித்தவெறி ஏறுதேயடா
நூல்கள் கனித்தமிழில் அள்ளிடவேண்டும் அதை
நோக்கித் தமிழ்ப் பசியும் ஆறிடவேண்டும்.

தேவர்க் கரசுநிலை வேண்டியதில்லை அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவில் தமிழ்படித்துச் சாகவேண்டும் என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்.
பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழும் ஓசை கேட்கவேண்டும்
ஓடையிலே என்சாம்பல் ஓடும்போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்

**எழுதியவர் ஈழக் கவிஞர் மாவிட்டபுரம் க. சச்சிதானந்தன்.**



# யதார்த்தம்

**ஒரு** தாய் அப்போதுதான் ஒரு குழந்தையை பிரசவித்திருக்கிறாள். அந்தக் குழந்தையின் தந்தை ஒரு வாரத்துக்கு முன்னால்தான் இறந்து போனான்.

‘எமதர்மன் ஒரு எமதூதனை அனுப்பி,அந்த அம்மாவுடைய உயிரை எடுத்துக் கொண்டு வந்துவிடு’ என்கிறான்.

இந்த எமதூதன் நினைக்கிறான், ‘ஐயோ பாவம் அப்பாவும் இல்லை, அம்மாவையும் நான் எடுத்துக்கொண்டு போய்விட்டால் இந்தக் குழந்தைக்கு யார் கதி?’ என்று எடுக்காமல் திரும்பி விட்டான். ஆக, எமதூதன் அந்த குழந்தைக்கு யார் கதி என்று நினைத்து பரிதாபப்பட்டதனால் உயிரை எடுக்காமல்



போய்விட்டான். ஆனால், அங்கே எமன் சொல்லிவிட்டார், ‘உனக்கு தேவலோக ரகசியங்கள் தெரியவில்லை. கடவுளுடைய அருளாட்சி எப்படி நடக்கிறது என்று தெரியவில்லை. அது தெரிகிற வரைக்கும் பூமியில் போய் கிட’ என்று அவனைத் தூக்கி பூமியில் போட்டுவிட்டார்.அவன் ஒரு பூங்காவில் முனகிக் கொண்டு கன்னங்கரேலென்று கிடக்கிறான்.

அப்போது அந்த வழியாக வருகிற ஒரு தையற்காரன், என்னடா இது, இங்கே முனகல் சத்தம் கேட்கிறதே என்று அவனைப்பார்த்து விட்டு, இவனிடம் இருந்த துணியை அவனுக்கு போடுகிறான். மேலும் ‘என்னுடன் வா! என்கிறான்....

எமதூதன் ஒரு வார்த்தை பேசவில்லை.தையற்காரனுடன் அவன் வீட்டுக்குச் சென்றான். திண்ணையில் எமதூதனும், அந்த தையற்காரனும் படுத்திருந்தனர். அப்போது, அந்த தையற்காரனின் மனைவி தையற்காரனை மட்டும், ‘வா வா வந்து கொட்டிக்கோ!’ என்று கூப்பிடுவாள். அவன் ‘விருந்தாளி வந்திருக்கிறானே’ என்று சொல்வான். அவள் கணவனை திட்டி விரட்டுவாள்.

‘விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும்
வேண்டற்பாற் றன்று’.

எமதூதன் ஒன்றும் சொல்ல மாட்டான். போய்க் கொண்டே இருப்பான். ஒரு பத்து நிமிடம் கழித்து இவள் ‘சரி! சரி! வா!’



என்று எமதூதனை மறுபடியும் கூப்பிடுவாள்.அப்போது அவன் லேசாக சிரிப்பான். கன்னங்கரேலென்று இருந்த அவன் உடம்பு கொஞ்சம் பொன்னிறமாக மாறும். ஆனால் ஒன்றும் பேச மாட்டான்.

தையற்காரன் ‘எனக்கு இந்த காஜா போடுவதற்கு பட்டன் தைப்பதற்கு எல்லாம் ஆளில்லை. தங்குவதற்கு இடமும் சாப்பாடும் போடுகிறேன். எங்கள் வீட்டில் இருந்து கொள்’ என்று சொன்னான்.எமதூதன் டெய்லரிங் அசிஸ்டண்ட் ஆகிவிட்டான்...

‘ஒரு பத்து வருடம் ஆகிறது. ஒரு குதிரை வண்டியில் ஒரு பணக்கார பெண்மணி கை கொஞ்சம் முடமாக இருக்கிற குழந்தை, அத்துடன் ஒரு நல்ல ஆரோக்கியமான குழந்தை என இரண்டு பேரையும் கூட்டிக் கொண்டு வந்து தையற்காரனிடம், இந்தக் குழந்தைக்கு நல்லா தளர்வாக தைக்க வேண்டும். கை கொஞ்சம் சரி இல்லாமல் இருக்கிறது’ என்று சொன்னாள்.

எமதூதன் அந்த குழந்தையைப் பார்ப்பான். அந்த பணக்காரப் பெண்மணியையும் பார்ப்பான். சிரிப்பான். அவன் உடம்பு இன்னும் கொஞ்சம் பொன்னிறமாக மாறும்.இன்னும் ஒரு ஐந்து வருடம் ஆகிவிடும்.

ஒருநாள் ஒரு பெரிய பணக்காரன் பென்ஸ் காரில் வருவான். வந்து ‘இந்தாங்க! பத்து மீட்டர் துணி இருக்கிறது. இதிலே 20 வருஷம் தாக்குப் பிடிக்கிற மாதிரி சூப்பராக சபாரி சூட் தையுங்கள்’ என்று சொல்லி கொடுத்து விட்டுப் போவான். அதற்குள் நம் எமதூதன் தேர்ந்த தையற்காரன் ஆகிவிடுகிறான்....

முதல் நாள் போய்விட்டது.....

இரண்டாம் நாள் போய்விட்டது....

தையற்காரன், ‘நாளை டெலிவரி! அந்த பணக்காரன் வந்து கேட்பான், என்ன சொல்வது?’ என்று கேட்கிறான்.

இவன் டர்ரென்று அந்த பேண்ட் துணியை கிழிப்பான். ஒரு தலையணை உறை, பெட் கவர் தைப்பான். தையற்காரன் திட்டுவான்.என் பிழைப்பில் மண்ணை போடுவதற்கு வந்தாயா? இப்போது அவன் வந்து கேட்டால் நான் என்ன பண்ணுவது?’என்பான்.

அப்போது கார் டிரைவர் ஓடி வருவான். ‘நீங்கள் சபாரி தைக்காதீர்கள். என் முதலாளி இறந்து விட்டார். அதனால் அவருக்கு ஒரு தலையணை உறையும், மெத்தை உறையும் தைத்து விடுங்கள்’ என்று சொல்வான்.

இவன் முகத்தில் சிரிப்பு வரும் முழுவதும் பொன்னிறமாக மாறி விடுவான்.

அப்படியே மேலே போவான்.

அப்போது தையற்காரன் சொல்வான், ‘அப்பா நீ யார்? வாழ்க்கையில் இதுவரைக்கும் மூன்று முறைதான் சிரித்தாய். ஒவ்வொரு தடவை சிரிக்கிற போதும் உன் உடம்பு பொன்னிறமாக மாறியது. அதனால் அதற்கு விளக்கத்தை சொல்லிவிட்டு, நீ போ!’ என்பான்.

அவன் ‘நான் எமனுடைய தூதுவன். ஒரு தாய் இறந்து விட்டாள், அந்த குழந்தைக்கு யார் கதி என்று அந்த தாயின் உயிரை எடுக்காமல் விட்டதனால் பூமியில் போய் தேவ ரகசியத்தை தெரிந்து கொண்டு வா’ என்று அனுப்பினார்கள். அதனால் வந்தேன்.

‘என்ன தெரிந்து கொண்டாய்?’ என்று இவன் கேட்பான்.

முதல் நாள் உன் மனைவி என்னை அடிக்க வந்தாள் அல்லவா...? அப்போது அவள் முகத்தில் தரித்திர தேவி தெரிந்தது.

பத்தாவது நிமிடம் என்னை சாப்பிட வாவா என்று கூப்பிடும் போது அன்னை மகாலட்சுமி தெரிந்தார்.

அப்போது, இந்த உலகத்தில் ஒருவன் பணக்காரன் ஆக இருப்பதற்கும் ஏழையாக இருப்பதற்கும் அவனுடைய எண்ணங்கள்தான் காரணம் என்று தெரிந்து கொண்டேன். இது போய்விட்டு அது வருவதற்கு பத்து நிமிடம் தான் தேவை என்றும் தெரிந்து கொண்டேன்.

இதுதான் தேவரகசியம் ஒன்று..

மனிதர்களிடமே பெரிய திட்டங்கள் எல்லாம் இருக்கிறது. ஆனால் எந்த கார்டை வைத்து விளையாடுவது என்று தெரியாததினால் வம்பில் மாட்டிக் கொள்கிறார்கள்.

பத்து வருடம் கழித்து ஒரு பணக்கார பெண்மணி குதிரை வண்டியில் வந்தாள் அல்லவா...? அவளுடன் ஒரு குழந்தை





கை முடமாக வந்தது அல்லவா...?

அதுதான் நான் இதற்கு அம்மா இறந்து விட்டால் யார் பார்த்துக் கொள்வார்கள் என்று நான் நினைத்த குழந்தை.நிஜமான தாய் ஏழை. அவள் இறந்து விட்டால் கூட இந்த குழந்தையை நன்றாக பார்த்துக் கொள்வதற்கு, இதற்கு கொஞ்சம் தளர்வாக தைக்கவேண்டும் என்று சொல்கிற அளவிற்கு ஒரு பணக்கார அன்பான அம்மாவை இறைவன் தயாராக வைத்திருக்கிறான். இது எனக்கு தெரிந்த போது இரண்டாவது முறை சிரித்தேன்.

ஒரு எமதூதன் ஆகிய எனக்கே பச்சாதாபம் இருக்கிறபோது, இறைவனுக்கு இருக்காதா? அவன் அதற்கு ஒரு மாற்று வழி வைத்துக் கொண்டுதான் அந்த உயிரை எடுப்பான். இது எனக்கு தெரிந்தபோது இரண்டாவது தேவ ரகசியம் புரிந்தது.

கடவுள் எல்லாம் காரண காரியங்களோடு நடத்துகிறான்.

மூன்றாவது தேவ ரகசியம்....

மூன்று நாட்களில் சாகப் போகிறவன் இன்னும் 20 வருஷம் நான் உயிரோடு இருக்கப் போகிறேன் என்று நினைத்துக் கொண்டு, நன்றாக 20 வருஷத்திற்கு வருகிற மாதிரி துணி தை என்று சொன்னானே...

எனக்கு தெரியும் அவன் சாகப்போகிறான் என்று, அதனால் தான் நான் துணி தைக்கவே இல்லை.

அவன் இறந்த அந்த நேரத்தில் துணியை கிழித்து தலையணை உறையும், மெத்தை உறையும் தைத்தேன்.

இந்த ஜனங்கள் இந்த உலகத்தில் ஏதோ நூறு வருஷம் இருநூறு வருஷம் கொட்டகை போட்டுக் கொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டு குழம்பிக் கொண்டிருக்கிறார்கள்.சாவு எப்போது வேண்டுமானாலும் வரலாம்.

நேற்று இருந்தவன் இன்று இல்லை. அதுதான் இந்தக் கலி யுகத்தின் எதார்த்தமான உண்மை...

அதுவே தெரியாமல் ஒவ்வொருவனும் நான் மட்டும் ரொம்ப வருஷம் இருப்பேன் என்றும், மற்றவன்தான் செத்துக் கொண்டிருக்கிறான் என்றும் நினைக்கிறான் அல்லவா?

அதுதான் மூன்றாவது ரகசியம்...

அதனால்தான் இந்த உலகத்தில் அவன் திறமையாக செயலாற்ற முடியாமல் இன்னும் 20 வருஷம் கழித்து நடக்கப் போகிற குழந்தையுடைய கல்யாணத்திற்கு இன்றைக்கு காசு இல்லையே என்று வருத்தப்படுகிறான்..

இன்னும் 15 வருடம் கழித்து கல்லூரியில் படிக்கப்போகிற பையனுக்கு பணம் இல்லையே என்று வருத்தப்பட்டு கொண்டு இருக்கிறான்..

அதனால்தான் உலகத்தில் நிம்மதி இல்லாமல் இருக்கிறது. பேசிக் கொண்டிருக்கிறபோது இப்போதே செத்துப் போவோம், என்று நினைத்தால், நீ சந்தோஷமாக இருப்பாய்..

இந்த மூன்று ரகசியங்கள்...

அதாவது ஏழையாக இருப்பதும் பணக்காரன் ஆக இருப்பதும் நம்முடைய எண்ணங்களால் நடக்கிறது.

இரண்டாவது எது நடந்ததோ அதற்கு கடவுள் ஒரு மாற்று வழி வைத்திருப்பார்.

மனிதனின் மனநிலையில் உள்ள ஈகோவினாலும், அறியாமையினாலும் அவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடிவதில்லை.


மூன்றாவது எந்த நேரத்திலும் சாவு வரலாம்.

இது தெரியாமல் மனிதர்கள் கொட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அஞ்ஞானம்தான் உலகில் துக்கங்களுக்கு எல்லாம் காரணம்.

இவைதான் அந்த மூன்று தேவ ரகசியங்கள் என்பான்....

எனவே, நாமும் இந்த தேவ ரகசியங்களை புரிந்து கொண்டு வாழப் பழகி விட்டால், நம் உடலில் உயிர் இருக்கும் வரை நிம்மதியாக வாழலாம்...





# ஈகம் வழி நடத்தும்!!

பொழில்

தமிழ் வார்த்தைகளுக்குத்தான்
எத்தனை
அழகான அர்த்தங்கள்!
இருந்தும்.
எனது வார்த்தைகள்
வலுவிழந்து
தளர்ந்து கிடக்கின்றன..
அன்று
உண்ணாநோன்பு மேடையில்
இருந்த
திலீபன் போல!!

மறக்குமா..?
வெள்ளமெனத் திரண்டது இனம்!
அலைகடலென ஆர்ப்பரித்து
கதறிக் கதறி அழுதது!
'விட்டு வா மகனே!
வீணர்களுக்கு இது புரியாது...'
என
பெற்ற வயிறுகள்
பதைபதைத்தன!

அவன் முகம்கூட அறியாத
பிஞ்சுகள்
'அண்ணா' என்று
தேம்பியழுதன.

தம் சிசுக்களை அணைத்தபடி
இரவும் பகலும் அவனைச் சூழ
தவம் இருந்த பல பெண்கள்
அரசியல் அறியார்.
அவர்களுக்கு புரிந்ததெல்லாம்
காந்தி தேசம்
அவனை
காவு கொள்ளப் போகிறது
என்பதுதான்.

அடிப்படையில் ஒரு மனிதன்
வாழ்வதற்கான
வழிகளைத்தானே
அவன் கேட்டான்?
பாரதத்தை பங்கு போட்டுத் தா
என்றா ஐந்து கோரிக்கைகள்
அவன் வைத்தான்?

தாக்குதல்தான் தீர்வாகும்
என்றது இளரத்தம்.
காந்திகூட
சுட்டுக் கொல்லப்பட்டார்
என்பது தெரிந்தும்
காந்தியை தொழுபவர்களிடம்
தார்மீக முறைப்படி
கேட்பது கட்டாயம்
என்றான் திலீபன்.

உடல்
வலுவிழக்க வலுவிழக்க
உறுதி உரம் கொண்டது அவனில்.
எவராலும்
அவன் மனதை
மாற்ற முடியவில்லை.

சிறுநீர் கழிக்கவும் முடியாமல்
அவதியுறுகிறாயே..!
சிறுதுளி நீரேனும்
அருந்து
என்றபோதுதான்
தன் சினத்தைக் காட்டினான்.

# ஈகம் வழி நடத்தும்!!



நிழலுக்கும் நிஜத்துக்கும்
இடையில்
அவன் நினைவுகள்
ஊசலாடத் தொடங்கின
ஆனாலும் என்ன?

நினைவு வந்தவுடன்
அடுத்ததாக
என்ன செய்ய வேண்டும்..
யார் யார்
எந்த வேலையை
முடிக்க வேண்டும்
என்பதை நினைவூட்டுவதிலும்
மக்களுக்கான
உரை நிகழ்த்துவதிலும்
அவன் கவனமிருந்தது!!

தன் நிலை மறந்தான்.
தனை தோள் சுமந்த
தந்தையை மறந்தான்.
தன்
உடன் பிறப்புகளைத் துறந்
தான்.

வசதிகள், வாய்ப்புகள்,
கல்வி, புகழ் அனைத்தும்
துறந்தான்!
என் தேசம்
என் உயிரனைய மக்கள்
என் தலைவன்
என்பவை மட்டுமே
அவன் எண்ணத்திலிருந்தன!

புன்னகையுடன்தான்
நீங்கள்
திலீபனைப் பார்த்திருப்பீர்கள்.
அதனால்தானோ என்னவோ
உடல் சுருங்கி
உயிர்துறந்த கணத்திலும்
பற்கள் மட்டுமே
எடுப்பாயிருந்து
மென்னகையுடன்
ஈகத்தைத் தாங்கினான்!!

நீர் வற்றிய உடலையும்
கல்விக்கு
தானம் செய்யும்
பெருந்தன்மை
எத்தனை பேருக்கிருக்கும்?

திலீபனுக்கு இருந்தது!
அவனை பண்போடு வளர்த்த
அவன்
தந்தைக்கிருந்தது!

மிக நீண்ட
முப்பத்தாறு ஆண்டுகள்
கடந்தன.
முதுகில் குத்திய
இந்தியத் துரோகம்
மறக்கவில்லை எங்களுக்கு!!

தேசத்துக்காக
தம்மைக் கொடுத்தவர்
மக்களுக்காக
மாண்டு போனவர்
மறையவில்லை - எம்
மனங்களில் வாழ்கிறார்.

மக்கள்தான்
புரட்சியை நடத்துவார்கள்.
விழி நீர் துடைத்து
வழி நடக்கிறோம்!
வருங்காலம் நமதாக
வழிகாட்டும் உமது ஈகம்!!

# பின்னத்தில் (Fraction) பாடி அசத்திய ஔவையார்!



### பெண்குலத்திற்கே பெருமை

நமது பழந்தமிழ் புலவர்கள் பாடல் எழுதுவதற்கு எழுத்துகளை மட்டும் பயன்படுத்தவில்லை , எண் களையும் அதிலும் குறிப்பாக 'FRACTIONS' என்று இக்காலத்தில் நாம் அறியும் பின்னங்களையும் பயன்படுத்தி இருக்கின்றனர்.

### இதற்கு ஔவைப் பாட்டி பாடிய பாடல் ஒரு நல்ல உதாரணம்:

*'எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே,*
*மட்டில் பெரியம்மை வாகனமே, - முட்டமேல்*
*கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே,*
*ஆரையடா சொன்னாயடா?'*

இது தன்னை நையாண்டி செய்த புலவர் ஒரு வரை பார்த்து ஔவை வசை பாடியது இது. (வசை = திட்டுதல்)

இதில் முதல் வரியில் வரும் 'எட்டேகால்' என் பதை எட்டு + கால் அதாவது 8 + 1/4 என்று பிரித் துப் படிக்க வேண்டும்.

அப்படிப் படித்தால் 8 என்பதற்கு உரிய தமிழ் எண் 'அ' அதேபோல் கால் (Quarter) 1/4 – என்னும் பின்னத்துக்கு உரிய தமிழ் எண் 'வ'.

ஆக, எட்டேகால் = எட்டு + கால்

(எட்டு) 8 = அ

(கால் )1/4 = வ

எனவே இப்போது எட்டேகால் = அவ.

இப்போது மேற்கண்ட பாடலின் முதல் வரியை படியுங்கள்.

'அவ' லட்சணமே என்று பொருள் வருகிற தல்லவா?

இப்படி மிகவும் நுட்பமாக, தன்னை இகழ்ந்த வனை வசை பாடுகிறார் ஔவை.

### அடுத்த வரிகளுக்கான பொருள்:

1. எமனேறும் பரியே – எருமைக்கடா.

2. மட்டில் பெரியம்மை வாகனமே – மூத்த தேவி என்னும் மூதேவியின் வாகனமான கழுதையே.

3. முட்டமேல் கூரையில்லா வீடே – மேல் கூரை யில்லா வீடு அதாவது குட்டிச்சுவரே.

4. குலராமன் தூதுவனே – ராமன் தூதுவனே அதாவது குரங்கே.

5. கடைசி சொல்லான 'ஆரையடா சொன்னா யடா' என்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் வரும்.

'நீ ஆரைக் கீரையைத்தான் சொன்னாய் அடா!' என்பது ஒரு பொருள்.

இதில் இப்போது 'சொன்னாய்' என்பதை மட்டும் பிரித்தால்

'சொன்னாய்' = சொன்ன + நாய் என்று நாயை யும் குறிக்கும் அல்லது

யாரைப் பார்த்து சொன்னாய் என்று கேட்பது போல வும் குறிக்கும்.

அடடா!! ஔவையாரின் அறிவே அறிவு!

# கொட்டும் மழைக்கும் மத்தியிலும் நல்லூரில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி













